2 அணா

ஆசிரியர் மு.கருணாநிதி

முரசு 2 | சென்னை | 1—4—55 | வெள்ளி | ஒலி [illegible]


# முரசொலி முதலாண்டு!



# இரண்டாவது படிக்கட்டில் நாம்!

# ‘சத்தியசீலர்கள்’ சிந்தனை

காமனை யொப்பவர்—சித்த ருக்கிகள்—கோவை இதழ்க் கனி நித்தமும் விற்பவர்—கோல விழிக் கடையினுல் மருட்டியர்—தாமமலர்ப் பள்ளி மெத்தை படுப்பவர்—சோலைவனக் கிளியொத்த மொழிச்சியர்—

—திருப்புகழ் அமிர்தமல்ல, இப்போது பொழியப்போவது—ஒரு கதை—அரசியல் நிலை விளக்க உதவும் குட்டிக்கதை!

அத்தகைய மடங்கை ஒருவள் அந்த ஊருக்குக் குடிவந்திருக்கிருள். வடிவேல் விழிகளிலே வாலிபத் தேன் பருகுவதாக புலம்புவோர்—அல்லிக்கொடி நிகர்த்த மேனியின் அசைவிலே ஆனந்தம் கொள்வோர்—இவர்களது தொகை வளர்ந்தபடி இருக்கிறது.

அந்தக் குமரியின் கூட இருப்பவனுக்கு ஊரிலே உள்ள இளைஞர்களின் மனப்போக்கு புரியவில்லை. வாயைத் திறந்து கடன் என்று கேட்பதற்கு முன்பாகவே, அவன் உள்ளப் பாங்கை உணர்ந்துகொண்டு பொற்காசுகளைக் குவிக்கின்றனர்.

பூங்கொடியின் கழுத்திலே பாசிமணி மாலைதானே இருக்கிறது என்று அவன் ஊமைச் சாடை காட்டினுல் பொன்னரி மாலைகளை செய்து தருகின்றனர்!

மண்ணுசை, பொன்னுசை, மாதராசை நீத்தோரும், அந்த மடங்கையின் பார்வையைப் பெறுவதற்கு மகேஸ்வரனை நோக்கி தவமிருக்கத் துவங்கினர்.

அந்த மங்கையின் பெயரைப் பிரயோகிக்காமல் இருக்கும் போதே அவனுக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு வந்து சேருகிறது. செப்புக்காசுகள் என்று மடியை விரித்தால், மோகராக்கள் விழுகின்றன—வைரங்கள் குவிகின்றன—அவனுக்கு விஷயம் விளங்கவில்லை. எது எப்படியிருந்தபோதிலும், அவன் ‘அந்தரங்கம்’ உணராதவன் போலவே நடந்துகொண்டு வந்தான்.

பெண்ணைக்காட்டி பணம் சுருட்டுவதாக ஊராரால் தூற்றப்படும் அந்த ‘மாதொருபாகன்’ நிலையிலேதான் இந்நாட்டு காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

உதாரணம் மோசமாகத்தான் இருக்கிறது; ஆனுலும் என்ன செய்வது? உண்மை நிலையும் அப்படித்தானே அமைந்திருக்கிறது!

> “நான் அதிகாரத்தைக் காதலிக்கிறேன்; ஆமாம், நான் அதிகாரத்தை காதலிக்கிறேன். ஆனால், என்னுடைய காதல் ஒரு கலைஞனுடையதைப் போன்றது. ஒரு வைணிகன் தன்னுடைய வீணையைக் காதலிக்கிருன். எதற்காக? அதனின்று இன்னிசை எழுப்புவதற்காக. என்னுடைய அதிகாரக் காதலும் அதைப் போன்றதுதான்”
>
> —நெப்போலியன்

ஆவடி மாநாட்டிற்காக லட்சக்கணக்காக திரவியம் சேர்த்தார்களே, அது எப்படி வந்தது என்கிற பிரச்னை நெடு நாட்களாகவே மக்கள் மனதைக் கவர்ந்து வந்திருக்கிறது. கோவை மில் முதலாளிகளும், பஸ் முதலாளிகளுமாகச் சேர்ந்து, முதலமைச்சரையும் சுப்ரமண்யத்தையும் அழைத்து பண முடிப்பு ஒன்றை முன்பு வழங்கியிருந்தனர். கனம் அமைச்சர்களிருவரும் ஆகாய விமானத்தில் சென்னையிலிருந்து கோவை சென்று, அந்தப் பணக்குவியலைப்பெற்று வந்தனர். இது சம்மந்தமான கேள்வியொன்று சென்ற கிழமை சட்டசபையிலும்எழுப்பப்பட்டது.

அரசாங்கத்தில் பொறுப்பேற்கும் மந்திரி பதவியிலே இருப்பவர்கள், ஒரு கட்சியின் பெயரால் பணம் திரட்டலாமா?

—பிரச்னையைக் கிளப்பும் கேள்விதான்; அரசியல் படிப்பினை போதிக்க உதவும் கேள்வியுங்கூட!

அதற்கு சுப்ரமணியனுர் ஒரே நொடியில் பதில் கூறிவிட்டார்; “ஏன் வாங்கக் கூடாது? அவர்களும் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள்தானே”—என்று!

அவர் மேலும் கூறுகிருர்: “தனிப்பட்டவருக்கோ அல்லது ஒரு கூட்டத்துக்கோ அடிபணியாமலிருந்தால் மந்திரிகள் கட்சிக்கு பணம் திரட்டுவது தவறல்ல.”

திரவிய முடிச்சை கட்சியின் கஜானுவிற்குள் அனுப்பிவிடுவாராம், இவர்! ஆனுல், பின்னர் அந்த திரவிய முடிச்சு தந்தோருக்குக் கட்டுப்படாமல் இருக்கவேண்டுமாம்!

எப்படி முடியும் இது? லட்சம் லட்சமாகக் கட்சிக்குக் கொட்டி அழுபவர்கள், நாளை ஒரு ‘பர்மிட்’ என்று பல்லிளித்தால் கோவைக் கிழார் அவர்களை உதறித் தள்ளிவிடுவாரா? நெஞ்சிலே கைவைத்துச் சொல்லட்டும், நிதி அமைச்சர்! செய்வாரா அவர்? அப்படிச் செய்ய முற்பட்டால்தான், நாளை அவர் கட்சிக்கு வசூல் செய்வதற்கென்று பாத்திரத்தை அவர்கள் முன்னுல் நீட்டமுடியுமா?

இவர்களுக்கென்ன; மற்ற கட்சிக்காரர்களுக்கு இருப்பது போல குறைவற்ற செல்வமாம், பொதுமக்களா இருக்கிருர்கள்; உண்டி குறைத்துக்கொண்டாவது கட்சியின் உண்டியலை நிரப்புவதற்கு? அத்தகைய பொதுமக்கள் ஆதரவு குறைந்துவிட்ட காரணத்தால் தான் இப்போது தேசியத்தார்கள் முதலாளியின் மாளிகைகளிலே அட்சய பாத்திரத்தோடு காத்திருக்கவேண்டிய பரிதாபமான நிலைமை உருவாகியிருக்கிறது.

அதிகார மங்கை அணிந்திருக்கும் ‘பதவி’ என்னும் பட்டாடை—‘உதவி’ என்னும் ஒட்டியாணம்—அவள் உடுத்தியிருக்கும் ‘சலுகை’கள் என்னும் சல்லாத் துணி — இவைதான் தனதான்யம் கொண்ட பிரபுக்களை வசீகரித்திருக்கிறது; பஸ் முதலாளிகளையும், ஆலை அரசர்களையும் தாம்பூலம் வைத்து அழைக்கிறது!

‘எனை ஆளவேண்டிய நாயகியே! என்மீது ஒரு கண் வை; பின் உன்மீது என் உயிரையே வைக்கிறேன்’ — என்று சிந்து பாடிக் கிளம்பிவிட்டது அந்தக் கூட்டம், சேல்விழியின் வீடு நோக்கி!

இதையறியாத நிதி அமைச்சரோ, “நாங்கள் என்ன செய்வோம்—அவர்கள் கட்சிக்காக் கொடுக்கிருர்கள் — நாங்கள் வாங்கிக்கொள்கிருேம்” — என்கிற தோரணையிலே பதில் தருகிருர்!

கட்சிக்காகத்தான் அவர்கள் நிதி தருகிருர்களாம்!—சலுகைகளைப் பெறுவதற்காக அல்லாமல், கட்சியின் நலத்திற்காகவே அந்தப் பெருந்தனக்காரர்கள் உதவி புரிந்தார்கள் என்று நிதி அமைச்சர் நம்பிக்கொண்டிருந்தால், உண்மையிலேயே அவருடைய ‘குழந்தை மனப்பான்மை’ இரங்கத் தக்கதுதான்!

கதையிலே வருகிருனே ஒரு ‘அப்பாவி’—பொன்னையும் மணியையும் ஏன் தன் முன்னர் குவிக்கிறது அந்த வாலிபப் பட்டாளம்—என்கிற உண்மையறியாத ‘உத்தமன்’ — அவனது நிலைதான் நிதி அமைச்சரது நிலையும்!

லி!

அதிகார மமதை
மாச்சாரியார் உப்
வொரு வார்த்தை
து கிடக்கின்றன.

ாவைக்
தம் பெருநிதி சுரண்டல் இயந்
கள் பற்றிரும்பித்துவிட்டது.
சட்சபையிமுத் தளைபூட்டி,
தற நியாய மகிழ வேண்டிய
கா மக்கள் ார்த்து விட்டார்
சலுப்பட்டி ந்த ஏகாதிபத்ய
கள்காரணம் மசுற்றி வளைக்கு
கட்சின் ஒரு
வர்வருக்கு
ருக்கும் கட்சிக்க
வழியையும் உட
பெருள் திரட்ட
கிற

ார்!

அறிவிக்குமுகத்
யல் வானிலே
ஆல் இப்பே ாமகேதுதான்
டியர்களோ ஒன் பேச்சு!
அமைச்சர் — ாச்சாரியாரே!
பதவி வகிப்பவர்—ாடிய தென்
காரருக்கு க‘மார்க்கெட்’
சிறை போதின் மந்திரி
குன்லர்கள்—ஞ நக் கொடுங்
கள் நம் நெஞ்சு

ர்கள் செய் த்தை நட
வேயை? இன் வலையை
ளிட பணமும் பாதுகாத்து
கொடு, நாளை
வாதைக்காக அ
தத வளைக்காப

ார்!

முடியா, இந்த ச
கள்?

யவே முடியந்த பொன்
கள் சிக்காக அல் அடகு
இப்போது பெற்ற இந்தக்
நிதி, கட்சிக்கா மதே, அது
பெ லஞ்சமாக தன் குரல்
கள்ன்றம் கருதுகி வேண்டும்!
ர்க்கும்
னியாவது
ரும் இப்ப
இங்காந்திலே சீரும் றானர்ஸ்)
பெ ஒரு அமைச்
தாஸ்ாயிட் ஜார்
சொறுலே நேர்மை
ரம் ன்றுதான் பலரு
திருனர். ஒரே மகிழ்கி
அந்த வண்ணிலவு, நின்றென்று
சாலகுட்டையிலே
விட்டு. அவர் இம சொந்
போரு லிபரல் கட
நிதி ர்த்தார்—அந்தச்
மூலம் தான் என்னவோ
நல் கட்சிக்கு இருப்ப
செய் அணிவித்துவிட்டதா
மனப்பால் குடித்தார் பதவி
லும் சார்ந்துகொண்டு, கட்
சிக்காகும் நிதி கொட்டிய கார
ணத்தால் அவரும், அவரு
கட்சி ட்டிலே மதி
தது. கட்சியின்
வாக் கோபுரம் அ
உயர் வேண்டு
எண் டலிலே
வியர் துளிகளை
தே கூட நேரமி அரங்
நா ழதும் ‘நிதி, நிதி ருளா
அ ரோ, அந்த ப் பணி
அ ய கட்சிக்கு ப்போம்!
தே விட்டது! துணை
ப தை உணர ண்டை
இ ரதபுத்திரர்

# லையாங்கம்

1—4—55 வெள்ளி

## டாவது படிக்கட்டில் நாம்!

? இரண்டாவது படிக்கட்டில் அடியெடுத்துவைக்கிறது,
விட மக்களின் அன்பையும், ஆதரவையும் அஸ்திவார
து, தனிப்பட்ட யாரையும் புண்படுத்தும் நோக்கத்துடன்
தன்னகத்து மண்ணைப் பண்படுத்தும் நோக்கத்துடன்
நமது முயற்சிக்கு அமோக வெற்றி கிடைத்திருக்கிறது.
அனைவருமே படிக்கிறார்கள். அதைப் புகழாதார் மிகக்
து முழங்கும் கொள்கையை, எதிரொலிப்போர் தொகை
ந்தத் தித்திப்பான செய்திகள் நாள்தோறும் நமது அலு
வந்து குவியும்போது நமது இலட்சியத்துக்குச் சூட்டப்
மாலைகள் அவையென எண்ணி, அகமும் முகமும் மலர
ளைப்பையும் உதறியெறிந்துவிட்டு, உற்சாகத்தோடு நடக்கி
யரப்பறக்குது நமது இலட்சியக் கொடி" என்ற உலாப்

சாலி ஓராண்டுக் குழந்தை-அதைச் சீராட்டிப் பாராட்டி
பருமை அதன்வாசகர்களையே சாரும். அப்பப்பா! எத்தனை
ர்ப்புகளுக்கிடையே ஒரு இனத்தின் விடுதலை முரசு
வ...யிருக்கிறது! இந்த ஓராண்டு காலத்திலே மட்டுமல்ல;
ள்கை முரசொலியின் தோற்றத்திற்கு காரணமாயிருந்ததோ
காள்கைக் கழகத்திலிருந்தே அதையெதிர்க்கும் டகைவர்
ளத்துக்கெ...டுதான் இருக்கிறார்கள். அவர்களின் ஆவேச
ண்டவமும் ...ண்பற்ற செயல்களும் உச்ச கட்டத்திற்குப்
ம் இந்த ...களிலே, பசலைப் பருவத்து முரசொலி. தகாப்
செய...ண்டு சிரித்து, தன் பாதையிலே தவழ்ந்தபடி
...ம், தூய்மையற்ற எண்ணம், இழிசெயல்,
...சுக்கருத்து, நன்றி மறந்த தன்மை, தெளிவற்ற
...ழை புரியும் பண்பு- இத்தனையும் மனித
...த்து முரசொலியை எதிர்த்துப்பார்த்து, ஓய்ந்து,

இருக்கும் ஏடுகளுக்குப் போட்டியாக அல்ல; அவைகளேந்திவரும் கொள்கைகளுக்கு ஒரு அறைகூவலாக இருந்து வருகிறது நமது முரசின் ஒலி. திமிங்கலம்போன்ற இயந்திர சாதன மில்லாமல், தேசத்தை ஆளுவோரின் அரவணைப்பு இல்லாமல், பண முதலைகளின் பக்கத்துணையை நாடாமல், "நமக்கு நாமே" என்ற துணிவுடன் வெற்றிச் சாலையில் நடந்துகொண்டிருக்கிறோம்,

எழுத்துநடை எண்ணங்களுக்கு அணிவிக்கப்படும் அழகான உடை. அண்ணாவின் பாணியிலே நாம் பூட்டி மகிழ்ந்த அந்தப் பொன்னுடைகளைப பார்த்து கண்டனம் செய்தோர் — கனைத்துக் காட்டியோர்—புதுவேஷம் போட்டு நம்மீது பாய்ந்தோர், இன்று அவர்களையும் அறியாமலேயே நமதாடைகளை தங்கள் எண்ணங்களுக்கு அணிவிக்கக் காண்கிறோம். இது நமக்கு வெற்றி—முழு வெற்றி!

சொந்தத்திலே அச்சு இயந்திரம் இல்லாமலேயே 'முரசொலி' ஒரு ஆண்டை ஓட்டிவிட்டது எனினும், அச்சக வசதியில்லையே என்ற அச்சம் கொள்ளாமல் கொள்கை மணம் பரப்ப நாம் தயங்கியதில்லை.

அமெரிக்க நாட்டிலே கதையொன்று சொல்வார்கள். புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட நீராவிப்படகு அன்றையதினம் முதன் முறையாக மிஸிஸிப்பி நதியிலே மிதக்கவிடப்பட இருந்ததாம். அதைக் காணுவதற்கு நதியின் கரையிலே மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. அந்த ஜனத்திரளிலே புதுமை மணம் நுகர விரும்பும் வாலிப வயதினரும் இருந்தனர்; பழமைப் பிடிப்பு அகலாத 'பத்தாம் பசலி'களும் இருந்தனர்! இந்த இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவனொருவன், 'உம்; ஆளில்லாமல் இந்தப் படகு **எங்கே நகரப்போகிறது!'** என்று வக்கணை பேசினானும். பின்னர் படகு நீரைக்கிழித்துக் கொண்டு ஓங்காரக் கூச்சலோடு ஓட ஆரம்பித்தபோது, **'உம்; இது எங்கே நிற்கப்போகிறது!'** என்று அலுத்துக்கொண்டானும். அத்தகைய போக்குக் கொண்டோரைக்கூட 'முரசொலி' தன் முதலாண்டிலே சந்தித்திருக்கிறது. "உம்; எத்தனை வாரங்கள் போகும் பார்க்கலாம்?"—என்று ஆரம்பத்தில் அங்கலாய்த்தோர், பின்னர் கதையிலே வருபவனைப் போலவே "இந்த ஓட்டம் இன்னும் எத்தனை நாளைக்கு இருக்கும்?" என்ற கேள்வி அம்புகளைப் போட்டு நம்மைக் கேடயம் ஏந்தச் செய்தனர். 'முரசொலி'தரும் கழகக் கருத்துக்களை வாராவாரம் தூற்றி எழுதி அதையும் முன்பக்கத்திலேயே கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்து வியாபார நலம் பேணுகின்றன, சில பத்திரிகைகள்! சில எம். எல். ஏக்களும் இந்த இழிதகை செயல்களுக்கு பின்பாட்டு பாடுவது நமக்கு வேடிக்கையாகத்தான் இருக்கிறது!

அந்தத் தூற்றலும், தூஷணையும் 'முரசொலி'யின் பீடுநடையை இலட்சியப் பாட்டையிலிருந்து அணுவளவும் அகற்றியதில்லை. "ஏறு, நீ! முன்னேறு நீ!"—என்ற கருத்தமைந்த கீதத்தைமுழங்கிக்கொண்டு, முகஸ்துதியையும், முதுகுப்புறம் தாக்கும் முறைகெட்ட செயலையும் தாங்கிய வண்ணம். தமிழகத்தில் திருவுலா வருகிறது. முரசொலி தாங்கிவரும் எழுத்துக்களின் அழகை கலாபமயிலென்போர், அதன் வேகத்தை கர்ஜனைபுரியும் சிங்கத்துக்கு ஒப்பிடுவோர் வளர்ந்துகொண்டேதான் இருக்கிறார்கள். அத்தகைய நல்ல பண்பும் — விமர்சன நோக்கும் கொண்ட வாசகர்கள் செழித்துவளரும் ஒரு பத்திரிகையின் ஜீவநாடிகள். மற்ற வசதிகளிலே 'குசேலனாக' இருந்தாலும், வாசகச்

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

## காபாரதம் - [தொடர் சித்திரம்] - 4



# 20-ந்தேதியின் எதிெ

மார்ச் 20— திராவிடமெங்கும் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் எல்லாச் சிறப்புகளுடனும் நடந்திருக்கிறது.

'தாயகத்துக்குத் தந்துதவ என்னிடம் ஒரே ஒரு உயிர் தானே இருக்கிறது' — என்று எண்ணி ஆயாசம் கொள்ளும் ஆயிரமாயிரம் காளைகள் விந்தியத்திற்கு அப்பாலே வாழும் வன்நெஞ்சர்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர்! வந்த நெருப்புப் பொறிகளே'— என்று வடக்கு நாட்டை தூற்றினராம்!

"தென்னாடு முதல் 5–ஆண்டுத் திட்டத்திலே புறக்கணிக்கப் பட்டுவிட்டது. தென்னாட்டு மக்கள் வடநாட்டாரால் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர். 2-வது 5-ஆண்டுத் திட்டத்திலும் இதே நிலைமை நீடிக்குமானல், தென்னாட்டு மக்கள் மத்திய சாக்

நம்முடைய கண்டனக் கணைகள் வடக்கு நோக்கித் தாவியபோது, அவைகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் ஒருவர் முயன்றிருக்கிறார். யார் தெரியுமா, அவர்? அவரும் தென்னகத்தின் பிரதிநிதிதான். மார்ச் 27-ந் தேதியன்று டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இப்படிப் பேசியிருக்கிறார்:

"தென்னாடு புறக்கணிக்கப்பட்டு விட்டதாக குறைகூறக்கூடாது

## ★ அபாய விளக்கேற்றும் அம்ெ

அன்றைய தினம் தென்னகத்திலே என்றுமில்லா-கொந்தளிப்பு குமுறல்! கோழையும் வீரனைப் போல கண்டனக் குரல் கொடுத்தான்—கூனனும் நிமிர்ந்த பார்வையால் வடவரைச் சுட்டெரிப்பதைப் போல வெறுப்பு நோக்கை சிந்தினன்!

இத்தனைக்கும் காரணமான பேரூர் முடிவு வீண் போகவில்லை; விழலுக்கு இறைத்த நீராகிவிடவில்லை!

டில்லி பாராளுமன்றத்திலே— கார் பிடிப்பிலிருந்து துண்டித்துக் கொண்டு, பிரிந்து செல்ல நேரிடும் என்பதை நினைவூட்டி எச்சரிக்கை செய்கிறேன்"—ஆட்சி பீடத்திலே அமர்ந்து கொண்டு, அலட்சியப் போக்கின் துணைநிற்போருக்கு அன்னிமாஸ்கரேன் தந்த அதிர்வேட்டுகள் இவைதான்!

சிதைந்து போன வாழ்வினரின் சார்பாக சிகப்பு விளக்கு காட்டி விட்டார்—அப்படிக் காட்டப்பட்ட அபாயக்குறிதான் அன்னி

தென்னாட்டிலே உணவுக் குறைவு ஏற்பட்டால், அதிக உற்பத்தியும், சிறந்த நீர்ப்பாசனத் திட்டமும் கொண்ட வடநாடு, தென்னாட்டுக்குத் தேவையானவற்றையெல்லாம் கொடுத்துதவும். கைத்தொழில் பொருள் உற்பத்தியாயினும், அல்லது தொழில் தேவைகளாயினும் இவ்விதமே வடநாட்டைத் தென்னாடு நம்பித்தான் இருக்க வேண்டும்!"

—எவ்வளவு திமிரான பேச்சு! இங்கு பஞ்ச மேற்பட்டால் அங்கு விளைந்துவரும் தானியங்கள்

## ★ அடிமைத் தளை பூணும் அய்ய

திராவிடரின் வாழ்வை கிள்ளி எறிந்துவிட நினைக்கும் சேட்டுகள் உலவும் கூடாரத்திலே-மலையாளக் கரை தந்த மாணிக்கம்; மங்கையர் குல மாண்பதனை விளக்க வந்த மாருதமாம் திருமதி அன்னை மாஸ்கரேன திராவிட மாதாவை வாழா வெட்டியாக்கும் போக்குதனை ஆதாரங்களோடு எடுத்துக் காட்டியிருக்கிறார். புயலெனச் சீறினராம்: 'எங்கள் பொலிவுதனைப் பொசுக்க மாஸ்கனுடையரேயவாள் வீச்சினும் கூர்மையான ஆவேசப் பேச்சு! பேரூர் முடிவை பாராளுமன்றத்துக்கு அழைத்துச் சென்று, பண்டிதருக்கும், பரங்கியரைத் துரத்திவிட்டு அவர்களது ஆசனத்திலே அமர்ந்திருக்கும் மார்வாரிகளுக்கும் அறிமுகப்படுத்திய அம்மையார் நாட்டு மக்களின் பாராட்டுக்குரியவர்!

நீரோட்டம் போல சரமாரியாக

நம்முடைய பற்றுக்குறையைப் போக்கிவிடுமாம்!

ஷெப்பீல்டு — சாமான்களையும், கிளாஸ்கோ துணிகளையும் இங்கு கொண்டுவந்து திணித்தவெள்ளைக் காரன்கூட இப்படி ஏகாதிபத்ய வெறி உணர்ச்சியோடு பேசவில்லை! இட்லரும், முசோலினியும் கூட நாட்டு மக்களைப் பார்த்து இப்படி அகங்காரமான பதில் கூறியது கிடையாது! அந்த ஏகாதி

---

(தலையங்கம் தொடர்ச்சி)

செல்வங்களைப் பெருக்கிக் கொண்ட விதத்திலே முரசொலி, இன்று முன்னணியில் நிற்கும் 'குபேரன்' என்று சொல்லிக்கொள்ள பெருமைப்படுகிறது; முரசொலி விற்பனையாகாத கடைகளில் வியாபாரம் குறைவுதான் என்ற நிலை ஏற்பட்டது குறித்து பூரிப்படைகிறது!

ஓராண்டுக்காலம்—இந்தக் குறுகிய காலத்திற்குள்ளாகவே முரசொலி 'மலர் வெளியிடுவதின் மன்னன்'—என்கிற பெயரைப் பெற்றுவிட்டது. முதன் முதலாக வெளிவந்த மே இதழிலிருந்து, இடையிலே தலைகாட்டி புகழ் தட்டிச் சென்ற ஜூலை மும்முனைப் போராட்ட சிறப்பிதழையும் சேர்த்து, சென்ற வாரம் வெளிவந்த அழகிரி நினைவு இதழ் வரை முரசொலி தனக்கென அமைத்துக் கொண்ட தனிச்சிறப்பை பாதுகாத்து வந்திருக்கிறது. அழகான மலர் வெளியிட 'அவாளு'க்குத்தான்தெரியும் என்கிற நிலைமையை, அண்ணாவின் பொன்னேவியத்தோடு துவங்கிய நமது பொங்கல் மலர், தன்னுடைய பால வயதிலேயே மாற்றி அமைத்துவிட்டது.

அந்த நிலை ஏற்படுவதற்காக நமது அலுவலக நண்பர்கள் ஏற்றுக் கொண்ட இன்னல்கள் எவ்வளவு தெரியுமா? தாங்கிக் கொண்ட துன்பச் சுமைதான் குறைவானதா? ஆசிரியரை மருத்துவமனையிலும், அருமை 'மலரை' அலுவலகத்திலும் சென்று கண்காணிக்க வேண்டிய பொல்லாத நேரம், பொங்கல் வந்த நேரம்! அந்த நேரத்திலே நமக்கு உற்ற துணையாக நின்ற மலர் பொறுப்பாளர்—நமதருமை நண்பர் முல்லை–சத்தி நன்றிக்குரியவர்! 'அவாள்' மலருக்கு சவால் விட்ட முரசொலி மலரின் வெற்றி நமது கொள்கையின் வெற்றி! வாசக நண்பர்களுக்குக் கிடைத்த பெருமை! விற்பனையாளருக்குக் கிடைத்த பூரிப்பு!—அவை அத்தனையையும் இந்த நேரத் ...றோம்; அந்த மகிழ்ச்சியிலே நீங்களும் பங்கு ... விரும்புகிறோம்!

இன்னும் இரண்டொரு வாரங்களிலே அச்சு இயந்திரம் பூட்டிட இருக்கிறது. திராவி... போராட்டத்திற்கு புரட்சி ஏடு வடித்துக் கொடுக்... முரசொலி அச்சு இயந்திரம் பணியாற்ற இருக்... மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

முரசொலிக்கு வியாபார நோக்கு இல்லை; தான் இடம் நிரப்ப வேண்டுமென்ற போக்கு... இடத்தில் நல்ல கருத்துக்களைச் சொல்லலாமே ஏடு, முரசொலி! நாணயமான விற்பனையாளர்க... கிறார்கள்; நல்லாசிகூறி, நல்லாதரவு தரும் வளர்ந்தபடி இருக்கிறார்கள். பின்னர் ஏன் மு... தடைப்பட வேண்டும்?

எங்கே,

இது ஒரு அரசியல் மேடை—இது ஒ... கம்—இது ஒரு இலக்கியப் பூஞ்சோலை—இ... தாரப் பேராசிரியன்—என்று புகழப்படும் அள... யாற்றும் 'முரசொலி'யை ஒருமுறை வாழ்த்து... வாசக நண்பர்களின் உள்ளம் நிறைந்த வாழ்... கொண்டே முரசொலி புதுவேகத்துடன் இரண்... இலட்சிய ஆண்டாக்கி விடும்!




## கிருஷ்ணா லீலா!

இந்த நாட்டிலே உணவுப் பஞ்சம் ஏற்படலாம் — உடைப் பஞ்சத்தால் பாரத புத்திரர்கள் பிறந்தமேனியுடன் சாலைகளிலே பவனி வரலாம். ஆனால் வால் முளைத்த மனிதர்களுக்கு மட்டும் என்றைக்கும் பஞ்சம் வருவதில்லை. வால் நட்சத்திரத்திற்கு உள்ள மதிப்பும், மரியாதையும் வால் முளைத்த மனிதர்களுக்கும் ஏற்பட்டுவிடுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் ஒரு திடுக்கிடும் செய்தியை பத்திரிகைகளில் படித்திருப்பீர்களே! பழைய ராமாயணத்திலே புதிய பகுதியொன்றை சேர்த்திருந்தார். ஒரு பெரிய மனிதர்! அதாவது அனுமானுடைய வாலுக்கு இராவணன் தீ வைத்ததாகத்தானே வால்மீகியும், கம்பனும் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால், இந்த அனுமாரோ தன்னுடைய வாலுக்கு தானே தீவைத்துக்கொண்டார். அந்த வாலுக்கு வைக்கப்பட்ட தீ 'அவாளு'டைய கோட்டையை தகனமாக்கிவிடுமே என்று எல்லோரும் மூக்கிலே விரல்வைத்துக் கொண்டனர். சீர்திருத்தவாதிகளெல்லாம் நாக்கிலே நீர் சொட்டச் சொட்ட இந்த நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டே வந்தனர்.

சில தினங்களுக்கு முன்பு டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஒரு வேடிக்கை காட்டினரல்லவா, அதைத்தான் இப்படி குறிப்பிடுகிறேன். தன்னுடைய பெயரிலே உள்ள ஜாதி வாலை அகற்றி விடுவதாகவும், இனி தன்னை டி. டி. கிருஷ்ணா என்றோ டி. டி. கிருஷ்ணன் என்றோ தான் அழைக்க வேண்டுமென்று அவர் கிளப்பிய அதிர்வேட்டு அக்கிரகாரத்தை என்ன பாடு படுத்தியது தெரியுமா! ஐயோ, பாவம்! அது வெறும் வெத்து வேட்டுதான். வாலுக்குத் தீவைக்கவில்லை அந்த வக்கணைக்காரர்! அதற்கு வெல்வெட் துணியிலே 'ஹேட்' ஒன்று அணிவிக்கப் போகிறாராம்! பெயர் குறைப்புப் பற்றி அவர் அறிவித்ததெல்லாம் வெறும் 'தமாஷ்'தானும்—தனியாக தமாஷா வரி செலுத்தாமல் இந்தியப் பிரஜைகள் டி.டி. கிருஷ்ணா அல்லது கிருஷ்ணனின் இந்த 'லீலை'யை தாராளமாக அனுபவிக்கலாம்!

வால் பற்றிய புதுப்பிரச்சினை கிளப்பியிருக்கும் இந்த வேதியரின் செயலைமட்டுமல்ல; அவரையே உண்மையில் ஒரு தமாஷ் பொருளாக ஆக்கிவிட்டார் நம கருமைச் சித்திரிகர் சங்கர்! இந்தவாரம் 'சங்கர்ஸ் வீக்லி'யில் வந்திருக்கும் கேலிச் சித்திரம்தான் இது-செய்தி வெளியிட்ட போது அவர் வாலை சுருட்டி வைத்திருந்தார்; இப்போது வெளியே நீட்டிவிட்டிருக்கிறார் — அவ்வளவுதான் வித்யாசம்!



சீர்திருத்த வாள்கொண்டு வெட்டி வீசினலன்றி நிமிர்க்க முடியாத பொருளாயிற்றே, அது! அவ்வளவு விரைவில் அது அகன்றுவிடுமா, என்ன?

★

## ஆத்திர சாமிக்கு!

நிமிர்க்கமுடியாத பொருள்கள் எங்கும் இருக்கின்றன. நம்மிடையேகூட உலவுகின்றன.

நண்பர் மாரிசாமியைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? காங்கிரசிலே உள்ள துடிப்பான வாலிபர். லிங்கம் அண்ணாச்சி அவரைப்பற்றி என்னிடம் கதை. கதையாகச் சொல்லியிருக்கிறார்; பிறவிக்குருடுகளும், செவிடுகளும் உலவும் தேசியக் கூடாரத்திலே, கண்களையும், காதுகளையும் எதிர்முகாம் நோக்கித் திருப்பி வைத்துக்கொண்டு, அங்கிருந்து எதிரொலிக்கும் நல்ல கருத்துக்களை — மெல்லாமலேயே விழுங்கக்கூடிய முழு உண்மைகளை எப்போதும் வரவேற்றிடத் துடிக்கும் நோக்கு கொண்டவர் அவர், என்றுதான் இதுநாள்வரை கேள்விப்பட்டிருந்தேன். ஆனால், மாரிசாமி ஒரு ஆத்திரசாமி என்கிற உண்மை இப்போதுதான் வெளிவர ஆரம்பித்திருக்கிறது.

ஏனோ திடீரென்று திராவிடமுன்னேற்றக் கழகத்திடம் அவருக்கு 'சீற்றம்' கிளம்பி யிருக்கிறது!

அவர் கேலி செய்து எழுதுகிறார், 'நம் நாடு' பத்திரிகை 'சிலிண்டர் மிஷினி'ல் அச்சாகும் செய்தித் தாள்!' என்று!

நண்பர், அவசரப்பட்டுவிட்டார்! லட்சத்திற்கு மேற்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டு, தென்னகமெங்கும் ஆயிரமாயிரம் கிளைகள் கொண்டு, திராவிட சமுதாயத்தின் களை பிடுங்கக் கிளம்பியிருக்கும் ஒரு மாபெரும் ஸ்தாபனத்தின் நாள் ஏட்டைத்தான் அவர் எள்ளி நகையாடுகிறார்!

காமராசரை-காங்கிரஸ் கொடியின்கிழே அவர் அமைத்துக்கொண்டிருக்கும் ஆட்சி பீடத்தை-நாம் நேரடியாக எதிர்க்காமலிருக்கும்போதே மாரிசாமியின் கண்கள் இப்படிக் கலங்குகின்றன; மூக்கு இப்படித் துடிக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகத்திலே காங்கிரசில் இருப்பதுபோல கோயங்காக்களும், சீனுவாச அய்யங்கார்களுமா இருக்கிறார்கள்? 'ராட்சஸ' இயந்திரங்களை வைத்து. ரம்மியமான காகிதத்திலே செய்தித்தாள் வெளியிடுவதற்கு எங்களிடத்திலே வசதி ஏது?

அவரது பத்திரிகை படித்த நமது தோழர்களிலே சி அவசரத்திலே தாறுமாறாகக்கூட பேசியிருப்பார்கள். மாரிசாமியைப்போல அமெரிக்கா சென்று, டாலர் துரைகளின்தயவு பெற நமக்கெல்லாம் நேரமேது- என்றுகூட பலர் முணகியிருக்கலாம். அப்படிப்பட்ட அவதூறுகளை அவர் செல்லமாக அழைப்பாரே அந்த 'காம்ரேடு'களிடமு 'மாநிலங்'களிடமுமே விட்டுவோம்; அவர்களே அதை செலவணி செய்துகொள்ளட்டும்! எப்படி இருந்தாலும் ஒருநாள் அவர் நம்மிடையே இருக்கும் தகுதி பெறக்கூடியவர். எழுதட்டும்; எழுதட்டும் — பாதகமொன்றுமில்லை! பெரிய, பெரிய ரோட்டரி மெஷின்கள் வைத்திருக்கும் தேசிய ஏடுகளெல்லாம் அவர் போற்றிடும் காமராசருக்கு ஆதரவு காட்டாத போது, சின்னஞ்சிறிய சிலிண்டர் மெஷினில் போகும் பத்திரிகைகள்தான் அவருக்குக் கைகொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பது குறித்து, சற்று எண்ணிப்பார்ப்பாரேயானால், மாரிசாமியே கண்ணீர் வடிப்பார்—அப்போது நாமே கைக்குட்டையுடன் அவரைச் சந்திப்போம்!

★

## 'பேன்சி டிரஸ்!'

சென்ற கிழமை சட்டசபை மெம்பர்கள் ஹாஸ்டல் தினவிழாவன்று நம்முடைய மந்திரிமார்களெல்லாம் வேஷப் போட்டிகளிலும், கயிறுஇழுப்புப் போட்டிகளிலும் கலந்துகொண்டார்களாம். குத்துச் சண்டைகள் நடந்தனவாம். வேஷப்போட்டியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டதாம். இந்தச்செய்தி முன்பே தெரிந்திருந்தால் நம்முடைய அமைச்சர்களுக்கு ஏற்ற வேஷத்தை பொதுமக்கள் சார்பாக சிபார்சு செய்திருக்கலாம்.

நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பிச்சைக்காரனைப்போல வேஷம் அணிந்து கொண்டு, வடக்கு திசைநோக்கி, கையிலே திருவோட்டுடன் பிச்சை கேட்டிருக்கலாம்! இல்லையேல், அவருக்குக் குரங்கு வேஷம் போட்டு, கையிலே கோலுடன் காட்சிதரும் குரங்காட்டியாக காமராசர் வந்து போகலாம்!

இதுவும் வேண்டாமென்றால், குடுகுடுப்பைக்காரன் வேஷம் போட்டுக் கொண்டு காமராசர் 'நிலச்சீர்திருத்தச் சட்டம்வருது! வரப் பாக்குது!'—என்று கோஷமிடலாம்!

மூலையிலே முடங்கிக் கிடக்கும் ஏ. பி. ஷெட்டிக்கு கோஷாப்பெண் வேஷம் பொருத்தமாயிருக்கும்!

கோணங்கிக் குல்லாய் அணிந்து கொண்டு ஜோக்கர் போல காட்சி தந்தால், எல்லா மந்திரி சபையிலும் அங்கம் வகிக்கும் பக்தவத்சலம் பரிசு பெறும் தகுதி பெறலாம்!

ராமநாதபுரம் ராஜா, குதிரையொன்றை ஓட்டிக் கொண்டு 'ஜாக்கி'யைப் போல வேஷம் போடலாம்!

இந்தப் போட்டிக்கெல்லாம் ராமசாமி படையாச்சியை நீதிபதியாக இருக்கச் சொன்னால், அவர் நிச்சயம் பெண் வேஷம் அணிந்த மந்திரி ஷெட்டிக்குத் தான் முதற்பரிசு கொடுப்பாரென்று எதிர்பார்க்கலாம்!

★ ★




"என்னம்மா! உங்களாலே தான் டிலே—'காமிரா' வெல்லாம் ரெடி—வாங்க சீக்கிரம். என்ன தாஸ், எவ்வளவு நேரம்? டைரக்டர் கோவிச்சுக்கிருரே!"

"இதோ வந்து விட்டேன் சார்! டிரெஸ் எல்லாம் பண்ணியாச்சு. கொஞ்சம் லிப்ஸ்டிக் மாத்திரம் சரி செய்துவிட்டு வந்து விடுகிறேன்."

"வாங்க; வாங்க சீக்கிரம்!"

தமயந்தி! அவளது சினிமா வாழ்க்கையில் இது ஒரு திருப்பம். இதுவரையில் எத்தனையோ படங்களில் நடித்திருக்கிருள். ஆனல் வந்துபோகக்கூடிய நடிகையாகத்தான். இப்போது கிடைத்திருக்கிறது சந்தர்ப்பம்; படத்தின் ஹீரோயின் சான்ஸ். அதனுல் அவளுக்கு எடுத்ததிலெல்லாம் சந்தேகம். பத்து நிமிஷத்தில் முடியக்கூடிய காரியம் இப்போது இருபது நிமிஷமாகிறது. சின்னச் சின்ன குற்றங்களினுல் பெரிய பெரிய தவறுதல்கள் வந்துவிடக் கூடாதே என்ற உள்ள பயம்தான் காரணம்!

ஏதோ ஒருவிதமாக தயாராகி விட்டாள். 'செட்'டுக்கும் போய் விட்டாள். டைரக்டரும் பாத்திரத்தின் அப்போதைய நிலைமைகளை விளக்கிக்கூறிவிட்டார். வசனமோ அவளுக்கு முழுப்பாடம். 'ரிகர்ச'லிலெல்லாம் பிரமாதமாகப் பேசி நடித்தும் சாண்பித்து விட்டாள். அதில் அவளுக்கு பயமுமில்லை. இருந்தும் ஒரு சிறு திகைப்பு—

"ஆமா! எல்லாம் தயார் தானு? 'டேக்' எடுக்கலாமா? காமிரா ரெடி...?"

"ரெடிங்க."

"லைட்ஸ்?"

விளக்குகள் எரிய ஆரம்பித்தன.

—"ஸ்டார்ட், பிளீஸ்..."

காமிரா ஓட ஆரம்பித்தது. தமயந்தி கதாநாயகனருகில் சென்று ஆசையோடு கைகளைப் பிடித்தாள். உடம்பு கொஞ்சம் நடுங்கியது. தன்னையறியாது கைகளைப் பின்வலித்துக்கொண்டாள்.

"கட்—கட்"

எல்லாம் நின்றுவிட்டன.

"லைட்ஸ் ஆப்"

விளக்குகள் அணைக்கப்பட்டன

"சே—சே! என்ன தமயந்தி; அதற்குள்ளாக மறந்துவிட்டாயே! ஏன் பயப்படுகிருய்? சேகரின் கைகளை யெடுத்து. ஆசையோடு முகத்திலே வைத்து அணைத்துக் கொள். உள்ளத்திலேயிருந்து வர வேண்டும், என்ன-மகிழ்ச்சியோடு கூடிய ஒரு பெருமூச்சு. அப்படியே விழுங்கி விடுபவள்போல் சேகரின் முகத்தைப் பார்த்து. 'ஸ்வாமி! இந்த இன்பம் எப்போதும் நிலைத்திருக்குமா? ரொம்ப மெதுவாக பேசு-என்ன?"

"இல்லே—இப்போ சரியாக செய்து விடுகிறேன் சார்."

"தமயந்தி! இப்படி சாதாரண 'ஷாட்'டெல்லாம் இரண்டுமூன்று 'டேக்' எடுத்தால் என்ன ஆவது. முதலாளி கதி?"

"இந்த 'டேக்' சரியாக வந்து விடும் சார்."

தமயந்தி தன்னையே நொந்து கொண்டாள். என்னடா இது. நாம் என்ன ஆண்வாடையே படாத அல்லி ராணியா, ஆண் பிள்ளையைத் தொட்டதும் நமது கைநடுங்க? அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. சினிமாச் சக்தியில் நன்ருக மூழ்கி எழுந்த பிறகுதான் அவளுக்கு கிடைத்திருக்கிறது இந்த வாய்ப்பு; படத்தில் 'எக்ஸ்ட்ரா' நடிகையென்ருல் என்ன என்பதை, இந்த இடத்திற்கு வருவதற்கு முன் அவள் கற்பனைகூட செய்ததில்லை. எத்தனையோ நாள் தன்து நிலையை எண்ணி மௌனமாக கண்ணீர் விட்டிருக்கிருள். இந்த பிழைப்பை விட்டுவிட்டு ஓடிவிடலாமா வென்ருல், அதற்கும் மனவலிமையில்லை. ஏதோ ஒரு நப்பாசை. அந்த சந்தர்ப்பமும் இப்போதுகிடைத்துவிட்டது. பின் ஏன் இந்த வெட்கம்? தன்னை சுதாரித்துக் கொண்டாள்.

காமிரா ஓட ஆரம்பித்தது.

> அவளோ ஆட்டக்காரி;
> அவள் கரம் பிடித்தவனே
> ஒரு அவசரக்காரன்!
> அந்த இளஞ் சிட்டுகள்
> அமைத்துக் கொண்ட
> வாழ்வோ......?

தமயந்தி சூழ்நிலையைமறந்துவிட்டு உணர்ச்சியோடு நடிக்க ஆரம்பித்தாள். டைரக்டர் முதல் எல்லோரிடமிருந்து 'சபாஷ்' பட்டமும் பெற்றுவிட்டாள்.

* * *

உழைத்தாள்: உழைத்தாள்: இரவு பகல்என்று பாராமல்! மனசாட்சியை விட்டு பல்லிளிக்க வேண்டி வந்தது: இளித்தாள்; சிரித்துப் பேசவேண்டி வந்தது; செய்தாள். முற்றும் துறந்த வியாசமுனி, தாயாரின் வேண்டுகோளை பூர்த்திசெய்ய முற்பட்டபோது என்ன நிலையிலிருந்தாரோ, அந்த நிலையிலிருந்தாள் தமயந்தி அப்போது. சந்திரவம்சம், வம்சாவிர்த்தியில்லாது அழிந்துபோகக் கூடாதே என்ற தாயின் அபிலாஷையை பூர்த்திசெய்தான் வியாசன் அன்று—சினிமாக்கலை, உன்னத படங்கள் இல்லாது மாய்ந்துவிடக் கூடாதே என்று கவலைப்படும் கலைஞர்களின் வேண்டுகோளை பூர்த்தி செய்கிருள் தமயந்தி இன்று! அவ்வளவு தான்!

"திரைடாம்பீகப" என்ற சினிமா பத்திரிகை படத்தேர்வு நடத்தியது. அவ்வருடத்திய 'சிறந்த நடிகை'யாக தமயந்தி தேர்ந்தெடுக்கப்பட்டாள். பிரபல சமூக சேவையாளரும், மிராசுதாரருமான பாஸ்கரன் பரிசைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தான்.

பாஸ்கரன் தமயந்தியின் கையில் பரிசைக் கொடுத்தபோது, கொட்டகையே அதிர்ந்தது, விசிறிகளின் கைதட்டலால்! யாரோ அவளை இன்பபுரிக்கே தூக்கிச் செல்வது போன்ற பிரமை தமயந்திக்கு.

பாஸ்கரன் கூறினுன் மெதுவாக, "உங்கள் நடிப்பு ரொம்ப பிரமாதம்" என்று.

நிமிர்ந்து நோக்கினுள். எதிர் பார்க்கவில்லை இவ்வளவு இளைஞனாக அவன் இருப்பானென்று. சிறிது திகைப்பு; மெல்லிய இளநகை. தலைகுனிந்து கொண்டாள்.

பத்திரிகைகள் தமயந்தியின் புகழை பிரபலப் படுத்தின. எங்கும் அவளது போட்டோக்கள். நாட்டின் சந்து பொந்துகளில் எல்லாம் அவளது பெயர் அடிபட்டன.

இப்போதெல்லாம் "பாஸ்கரன்-தமயந்தி" பெயர் ஒன்ருக அடிபட ஆரம்பித்தன. கடற்கரையோரத்தில், சினிமாக் கொட்டகைகளில், ஸ்டுடியோக்களில், இருவரும் ஜோடி ஜோடியாகவே காட்சியளித்தனர்.

பாஸ்கரனின் நளினமானபேச்சு, அவனது முதிராத இளமை, அழகிய முகம், தமயந்தியை அவன்பால் இழுத்துக்கொண்டிருந்தது.

* * *

ஸ்டுடியோவில் தமயந்தி வேகமாக 'மேக்கப்'பை கலைத்துக் கொண்டிருந்தாள். ஐந்து மணிக்கெல்லாம் அவள் பாஸ்கரனைப் போய் சந்தித்தாக வேண்டும். மணியோ ஆறடிக்கப்போகிறது. அவளது அவசரத்தைக் கண்டு 'மேக்கப்' சிப்பந்திகள் தங்களுக்குள்ளாகவே கண்ணடித்துக் கொண்டனர்.



"என்ன தாஸ்! யார் 'மேக்கப் ரூம்'லே? இடும்பியா? குந்தியா? ஊர்வசியா? இல்லே; அகல்யாவா? இடம் காலியா?"

பழக்கமான குரலாயிருக்கிறதே யென்று எட்டிப் பார்த்தாள் தமயந்தி. அவளது பழைய 'ஹீரோ' சேகர் வந்துகொண்டிருந்தான்.

"என்ன சார், வரும்போதே ஒரே கிண்டல் மயம்? உங்க ரெடிங்க"-மேக்கப் செய்பவனின் பதில் இது.

"கிண்டலா? இப்ப யாரப்பா இவுங்க இல்லாம படமெடுக்கிருங்க? ஆரம்பிச்சுட்டாங்களே பழயபடி;எப்படி பிள்ளையார்சாமி, மூக்கினுல் மூணு லட்சம் குழந்தை பெத்தாளாமே யாரோ ஒரு ராக்ஷஸி, அவளை பிள்ளை பெருதிருக்கும்படி செய்தாரு—எப்படி, எங்களப்பன் மகேஸ்வரனும் மகேஸ்வரியும் ஆனந்தத்தாண்டவம்புரிந்து அருளிய வரப்பிரசாதம் வாயு பகவானுல் சுமந்து செல்லப் பட்டு, சரவணப் பொய்கையில் கார்த்திகேயப்பெருமானுக காட்சியளிக்கப்பட்டது-எப்படி மகரிஷி காஷ்யபர், சிங்கம், யானை முதலியவைகளோடு கலந்து சூரபத்மன் முதலிய பெரும் பெரும் வீரர்களை பெற்றெடுத்தார் — இப்படியெல்லாம் படமெடுத்தா பிரமாதமா[illegible]ருக்குமா; இல்லையா? நல்லகாலம்—நம்ம 'சென் சார்'தான் [illegible]ருக்காங்க இப்ப. அவுங்க பாத்துக்கருங்க. ஆறுமுகமாம், யானைதலையாம், சிங்கமுகமாம், பெருச்சாளி மேலே யானை உட்கார்ந்திருக்குதாம்—இப்படியெல்லாம் சொல்லி எங்களுடைய, எங்கும் நிறைந்த பரப்பிரம்மத்தை கிண்டல் செய்தா, இவுங்க என்ன பாத்துக் கொண்டா இருக்கப்போறுங்க. எடுக்கட்டும், எடுக்கட்டும்—இந்தப் படமெல்லாம் வெவருவதைத்தானே பாக்கப் போறேன்."

இவைகளைக் கேட்டவாறே வெளியே வந்த தமயந்தி [illegible]ச்சலுடன் "சேகர்! இப்படி [illegible]சிப் பேசித்தான் உங்க தலையிலே நீங்களே மண்ணள்ளிப் போட்டுக் கிறீங்க. இல்லையானுல் உங்களை மிஞ்சின ஹீரோ கிடையாது" என்று கூறினுள்.

"அடெடே! தமயந்தியா? என்ன வேஷம்? ஐவருக்கு தேவி அழியாத பத்தினியா? கபுக்கரசி தாராவா?"

"ஐயெ...ஐய! இப்ப பேசுவதை விடமாட்டீங்க..."

"நல்லவேளை; உதை வராமல் பேசுவதோடேயே [illegible]றுத்திக் கொண்டாயே..."

கார் 'ஹாரன்' சப்தம் [illegible]ட்டது. இருவரும் திரும்பிப் [illegible]த்தனர். புதிய '[illegible]டிலாக்' வடி ஸ்டுடியோ உள்ளே வந்து [illegible]றது.

"சரி, சரி; நீ போ [illegible]யந்தி—அதோ வந்துவிட்டான் [illegible]ாஸ்கர். ம்...என்ன என்னவெலாமோ கேள்விப் படுகிறேன். [illegible]ஞ்சம் ஜாக்ரதையாய் இருக்கோ. நாம், நாம்தான் [illegible]ளதை மறந்துடாதே. ஏய்...தாஸ் நீ வா உள்ளே."

சேகர் சென்ற திக்கை பார்த்துக்கொண்டு நின்ருள் [illegible]யந்தி. பழயபடி 'ஹாரன்' சப்[illegible] காதைத் துளைத்த பிறகு [illegible] நினைவு வந்து திரும்பி[illegible] விநாடி முகத்தில் சிரி[illegible] யில் துள்ளல்; கா[illegible] ஏறிக்கொண்டாள் [illegible]

இரண்

...ன்னிக்கவும் பாஸ்கர் — இன் ஒரு சீன் முடியுது. அத அரை மணி நேரம் லேட்!''

...ர் வேகமாகப் பறந்தது.

* * *

இரவு சுமார் பத்து மணி யிருக்கலாம். பாஸ்கரும் தமயந்தியும் வீட்டின் மொட்டை மாடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். ஏதோ ஒரு ஆங்கிலப் படத்தைப் பார்த்துவிட்டு திரும்பிவந்து சிறிது நேரம்தானிருக்கும்.

''தமயந்தி...''— தயங்கினான் பாஸ்கர்.

''என்ன?''

''ஒன்றுமில்லை—தப்பாக எடுத்துக்கொள்ளமாட்டாயே?''

''என்ன, அப்படிக் கேட்கிங்க!''

''இந்த நமது நட்பு எப்போதும் நீடித்திருக்குமா?''

''இது என்னங்க அர்த்தமில்லாத சந்தேகம்.''

''அது...'' —வார்த்தைகள் வரவில்லை.

அவனது கண்களில் கூத்தாடும் ஏதோ ஒரு உணர்ச்சியைக் கண்டு கொண்டவள் போலவே தோன்றியது; ஆனாலும் மறைத்துக் கொண்டாள் தமயந்தி.

''நான் உன்னை எனது மனைவியாக்கிக்கொள்ள விரும்புகிறேன்'' —படபடவென்று கூறி முடித்து விட்டான் பாஸ்கர்.

''என்ன?''—சிறிது உரத்த குரலிலேயே வெளிவந்தது அவளது கேள்வி!

''தமயந்தி; தமயந்தி உனக்கு என்னைப் பிடிக்கவில்லையா?''

பாஸ்கரனின் குரலிலே காணப்பட்ட ஏமாற்றம்தான் தமயந்திக்கு அவளுடைய குரலின் கடுமையைத் தெரியப்படுத்தியது. முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக்கொண்டாள்.

''என்னங்க—நான் கேட்க வேண்டியதை...!''

''ஆ! அப்போது நீயும் என்னை விரும்புகிறாயா தமயந்தி?''

ஆவலோடு அவளது கைகளைப் பற்றினான். மெதுவாக அவற்றை விடுவித்துக்கொண்டாள் தமயந்தி.

''நமது திருமணத்தை ரொம்ப விமரிசையாக நடத்திவிடவேண்டும்!''

''என்னது?''

இப்போது உண்மையிலேயே திடுக்கிட்டவள் தமயந்திதான்!

''ஏன் தமயந்தி?''

''நிஜமாகவா?''

''நம்பிக்கை யில்லையா?''

இதற்குள் கொஞ்சம் சுதாரித்துக்கொண்டாள்—நடிகையல்லவா!

''இல்லை—அது அவ்வளவு அவசியமா என்று...''

''நான் என்ன அவ்வளவு கிழானவனா?''

''அப்படியல்ல; அதற்கு நான் ஏற்றவளா என்றுதான்...''

''நன்றாயிருக்கிறது. தமிழ் நாட்டின் தவநடிகை — கலைச்செல்வி. அவளிடமிருந்தா இந்தசொற்கள்? ...னல்லவா சிந்திக்க வேண்டும். ...க்கு நான் ஏற்றவனா என்று''

...வனது ஆசை உள்ளம்; அதில் ...ம்பி வழியும் நம்பிக்கைத் துளி ...: தமயந்தியை கலவரத்தி...த்தியது. தனது முந்திய ...க்கையை எண்ணினாள். படபடப்பு பொங்கியது—வார்த்தைகளில் ஒருவித நடுக்கம்.

''வேண்டாம் — வேண்டாம்! நான் கெட்டுப் போனவள்! சீரழிந்தவள்! உங்களை நான் பாழாக்க மாட்டேன்.''

''தமயந்தி, என்ன பேச்சு இது? உன்னை நீயே தாழ்த்திக் கொள்கிறாய். அதற்காக உன்னைக் கன்னி என்று எண்ணி என்னை நான் ஏமாற்றிக் கொள்கிறேன் என்று என் மீது இரக்கப்படாதே; உனது சென்று போன நாட்களை மறந்து விடு.''

பிறகு என்ன? பதிவுத் திருமணம் செய்து கொண்டார்கள். பத்திரிகைகள் பிரமாதப் படுத்தின இந்த விவாஹ சுபமுகூர்த்தச் செய்தியை!

தனது நட்சத்திர வாழ்வில் இனம் தெரியாத ஏதோ ஒரு குறை இவ்வளவு நாள் இருந்து வந்தது என்பதை இப்போது தான் தமயந்தி உணர்ந்தாள். அதுவும் இப்போது பூர்த்தியடைந்துவிட்டது. இன்பபுரியிலே சஞ்சரித்தாள்.

அவளது நடிப்புக்கலை வளர்ந்து கொண்டேயிருந்தது; ஆனால்...!

ஆவலோடு இருவரும் வெளிக்கிளம்ப துடித்துக் கொண்டிருப்பார்கள். ஸ்டுடியோவிலிருந்து செய்தி வரும், 'மாலை நாலுமணியிலிருந்து ஷூட்டிங்' என்று. பாஸ்கரனின் முகம் கருக ஆரம்பிக்கும் கொஞ்சிப்பேசி சிரித்து விட்டுச் சென்று விடுவாள் தமயந்தி.

சினிமா பார்க்கலாம் என்று திட்டம் போட்டுக் கொண்டு ஆவலோடு வீட்டுக்கு வருவான்; ஸ்டுடியோவில் 'ஷூட்டிங் இரவு இரண்டு மணிவரை தொடர்ந்து இருக்கிறது' என்ற செய்திவரும்; புழுங்குவான்.

தொடர்ச்சியாக இரவில் ஷூட்டிங் நடந்து கொண்டேயிருக்கும். துடிதுடித்துப் போவான். எல்லாம் தமயந்தி அவனது கண்ணெதிரே இல்லாத வரைக்கும் தான்.

பாஸ்கரனுக்கு சலிப்புதட்ட ஆரம்பித்தது.

* * *

மனைவி ஷூட்டிங்குக்கு சென்று விட்டதால் இவன் மட்டும் கடற்கரையில் உட்கார்ந்திருந்தான். யாரோ இருவர் பேசிக் கொண்டு செல்வது அவனது காதுகளில் பட்டும் படாததுமாக விழுந்தது.

''அதோ, உட்கார்ந்திருக்கானிலே—அவன் தான் சினிமா ஸ்டார் தமயந்தி புருஷன்.''

''அடே, அவனா? ஏன் இப்படி தனியே உட்காந்துட்டிருக்கான்?'

''பின்னே என்ன செய்வான்? சினிமா ஸ்டாருக்கு மாப்பிள்ளைன்னா சாமான்யமா? அவ அங்கே எவனாவது 'ஹீரோ'வோடு சுத்திக்கிட்டிருப்பா.''

இவைகள் அவனது மனதை அலைக்கழிக்கக்கூடாது என்று தான் முயற்சித்தான் பாஸ்கர், தெப்பக்கட்டையை தண்ணீருக்குள் அமுக்க முயற்சிப்பதுபோல! முடிவு, கலவரமும் மனநிம்மதியின்மையும்தான்!

காரை எடுத்துக்கொண்டுஸ்டுடியோ நோக்கிப் புறப்பட்டான்.

ஸ்டுடியோவில் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தது. காதல் கட்டம்! டைரக்டர் தமயந்தியிடமும் சேகரிடமும் (இந்தப் படத்தில் சேகர்தான் கதாநாயகன்—நீண்ட நாளைக்குப் பிறகு இருவ

○ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# அகப்பை சித்தர்

கையினிலே தட்டேந்தி சோர்ந்து நிற்கும் என்னைப் பார்த்து கைதிக்காவலன் மொண்டு ஊற்றும் சோளக்கஞ்சி கலகலவென சிரிக்கிறது. ''கட்டுண்ட திராவிடத்தை மீட்கப் போராடி, இன்று தட்டுடனே நிற்கும் தம்பிமாரே! கஞ்சியெனைக் கண்டு கலங்குவதேனோ'' என்று கேட்கிறது அகப்பைக் குள்ளிருந்து! இந்த அகப்பை சித்தரின் பேச்சிலும் அர்த்தமிருக்கிறது. புதிய தெம்புள்ள கருத்துமிருக்கிறது. இந்த சித்தரின் சூடான நாக்கு, எவ்வளவு குளிர்ச்சியான உண்மைகளைக் கொட்டுகிறது!

'' தம்பீ! குளிர் தருவிலே யிருந்த நீ, கொஞ்சம் கோடையையும் அனுபவித்துப் பார்! வெடித்த வயல்களுக்கு நீர் பாய்ச்சுகிறவனின் சிரமமும், மாட்டு மந்தையை ஒழுங்காக மேய்த்துச் செல்ல ஓடியாடும் மாட்டுக்காரப் பையனின் கஷ்டமும், காலிலே சணல் சாக்கைச் சுற்றிக் கொண்டு அதை வாழை நாரினால் கட்டி, தலையிலே காய்கறிக் கூடையுடன் கிராமாந்திர சுடுமணலில் நடந்து செல்லும் ''அன்றாடங் காய்ச்சி'' வியாபாரிகள்படும் அல்லலும், 'ஈன ஜென்மமெடுத்தேன் என் அய்யனே' என்று கரகரக்கும் தொனியில் பாடிக்கொண்டு, சுரைக்காயைக் குடைந்து மூங்கிலைச் செருகி தயாரித்த சுத்த சுதேசித் தம்புராவை மீட்டியபடி ஊர் ஊராக உருண்டு புரண்டு பிச்சையெடுக்கும் மனிதப் பழுப்புகள்—தளிர்கள்—படும் வேதனையும், அப்போதுதான் உன் உள்ளத்தைத் தொட முடியும். குளிர் நிழலிலிருந்து கோடைக்கு வா! குற்றாலத்திலிருந்து கொடைக் கானலுக்குப் போகாதே! கோடைக் கனலை கொஞ்சம் ரசித்துப் பார்!

அறுசுவை யுணவையே ஆயுள் பூராவும் நீ அருந்தினால் போதுமா? உன்னைப் பற்றித் தெரிந்து கொண்டால் மட்டும் போதுமா? உன்னைச் சூழ்ந்துள்ள உலகம் மிகப் பெரியது! கஞ்சியே குடித்து வாழும் ஒரு பெருங் கூட்டம். அதுவுமின்றி வாடும் ஜனக் கோட்டம். அவைகளைப் பற்றி நீ யோசிப்பது எப்போது?

என்ன; சொன்னதைக் கேட்காமல் என்னையே பார்க்கிறாய். தங்க நிறமாயிருக்கிறேனே யென்றா? இல்லை—இல்லை— என்னோடு கலந்துள்ள உமிகளைப் பார்க்கிறாய். உமிகளும் என் இனந்தான். எனக்கு உறவினர்கள்தான். உன் இனமென்ன லக்ஷணமாயிருக்கிறது; மனிதச் சிறுவனே! உமிகள் உன் சாதியிலும் உண்டு. அவர்களுக்கு உமிகள் என்று பெயரில்லை. முதலாளிகள் என்று பெயர்—ஆண்டைகள் என்று பெயர்-ஆதீனங்கள் என்று பெயர்-அந்தணர் என்று பெயர்-அவதார புருஷர் என்று பெயர்!

உமிகள் உன் இனத்திலும் உண்டு. அவைகளை நீக்கிவிட உன்னால் முடியுமானால்-என்னாலும் முடியும் உமிகளைப் போக்கிவிட! முயற்சித்துப் பார்!''

அகப்பை சித்தர் பேசிக் கொண்டேயிருந்தார். வரிசையாக நின்ற நானூறுக்கு மேற்பட்ட நண்பர்களின் தொகைதேய்ந்தது. கடைசியாக நான்; கையிலே தட்டுடன்! எஞ்சிய கஞ்சியார் என் தட்டில் குதித்தபடியே ''என்ன தம்பீ! சொன்னது புரிந்ததா?'' என்று கேட்டார். ''உப்பில்லை'' என்றேன். உங்கள் மனித ஜாதியின் உடம்பிலுந்தான் சிலருக்கு 'அது' இல்லை என்றார்.

—:(✱):—

# அ. குண்டுகள்!

மேலை நாடுகளிலே அணு குண்டுகள் மட்டுமல்ல; இப்போது சில அரசியல் குண்டுகளும் வெடிக்கப் போகின்றன! இங்கிலாந்திலும், அமெரிக்க நாட்டிலும் சில அரசியல் மாறுதல்கள் விரைவிலே நடைபெற இருக்கின்றன!

அனூரின் பெவான்-ஆங்கில நாட்டு தொழிற் சங்கங்களின் இருதயம்! தொழிற் கட்சியைத் தாங்கி நிற்கும் தூண்! அந்தத் தூணை அகற்றிவிட வேண்டிய நிலை இப்போது தொழிற்கட்சியிலே உருவாகி யிருக்கிறது.



கட்சியின் கட்டுப்பாட்டை மீறிவிட்டதாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு, அவரிடமிருந்த 'விப்' பதவியைப் பிடுங்கிவிடும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப் பட்டிருககிறது. ஆனால், செயற்குழுவோ அந்த அவசரத் தீர்மானத்தை இப்போது ஒத்திவைக்க முனைந்திருக்கிறது அடுத்த வாரம் கட்சியின் முக்கிடஸ்தர்கள் அடங்கிய குழுவொன்று பெவானை சந்திக்கும். அப்போது அவர் கட்சியின் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடப்பதாக உறுதியளித்தால், அவர்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது—என்று அறிவிக்கிறது, புதிய தீர்மானம்!

பெவான் வெறும் வாய்ச்சவடால்காரராக மட்டும் இருந்தால், கொந்தளிப்பு ஏதுமில்லாமலேயே அவரது அரசியல் வாழ்வை அஸ்தமிக்க வைத்திருப்பார்கள், அவரோடு கருத்து வேறுபாடு கொண்ட தொழிற் கட்சி சகாக்கள! ஆனால் அவருக்குப் பின்னாலோ அக்கிரோணிக் கணக்கில் ஒரு மாபெரும் படையே அணிவகுத்து நிற்கிறது: எந்த நேரமும் ஆதரவு தர துடித்துக்கொண்டிருக்கிறது!

பெவான் கட்சியை விட்டு விலக்கப்பட்டால், அவர் சார்ந்திருக்கும் தொழிற் கட்சியிலே குழப்பங்களும், கொள்கை சம்பந்தமான தெளிவற்ற போக்குகளும் நடமாடுகின்றன என்று பொருள்! மக்களிடையே இந்த விபரீதமான மனப்போக்கு உதயமாகிவிட்டால் அடுத்த தேர்தலிலே தொழிற் கட்சி தோல்வியை அணைக்க வேண்டியிருக்கும். எனவே தான் சமரச தூதுகோஷ்டி அனுப்புகிறார்கள்! ஒரு படி கீழே இறங்கி வருவதற்குக் கூட ஆட்லி காத்திருக்கிறார்!

இதிலிருந்து கொஞ்சம் மாறுபட்ட நிலைமைதான் கன்சர்வேட்டிவ் கட்சியிலே உருவாகியிருக்கிறது. அரசியல் பந்தயங்களிலே அதிக ஆண்டுகள் கலந்து கொண்ட காரணத்தால் அவருக்கு களைப்பு தட்டிவிட்டது. வயதேறிய போதும் வாலிப வேஷம் போட்டு, பதவி வேட்டையாடும் ஆந்திர கேசரி போன்ற தாத்தாக்களுக்கு தக்கதோர் பாடம் கற்பிப்பதைப்போல, சர்ச்சில் அரசியலிலிருந்து ஓய்வு பெறப் போகிறார். போர்க்கால ஆங்கில நாட்டின் புகழ்வாய்ந்த தளபதி தள்ளாத வயதில் இனி தான் கழிக்க வேண்டிய நாட்களை கணக்கு பார்க்கப் போகிறார். சர்ச்சில் ஏகாதிபத்ய வெறி கொண்டவராய் காட்சி அளித்தாலும், ஏற்றமிகுந்த அவரது பொது வாழ்வு போற்றுதற்குரியது!

இங்கிலாந்தில் மட்டுமல்லாமல் அமெரிக்காவிலும் அரசியல் துறவுகள் நிகழ இருக்கின்றன. ஜனாதிபதி ஐசன்ஹோவர் டெமாக்கிராட்டிக் கட்சியாரின் கடுமையான எதிர்ப்புக்கிடையிலே இப்போது துரைத்தனம் நடத்திவருகிறார். இந்த இக்கட்டான நிலைமையை மாற்றியமைப்பதற்காக மீண்டும் ஒரு தேர்தல் நடைபெறலாமோ என்று இப்போது யூகங்கள் பிறந்திருக்கின்றன. அப்படி ஒரு தேர்தல் வருமானால் ஐசன்ஹோவர் ஜனாதிபதி ஸ்தானத்துக்கு போட்டியிடுவாரா என்பதும் சந்தேகமாகத்தான் இருக்கிறது.

மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டால் 70—வயது முடிவுபெறும் வரை, ஐசன் பதவியிலிருக்க வேண்டும். அமெரிக்க வரலாற்றிலேயே யாரும், அந்தத் தள்ளாத வயதில் தலைமைப்பதவி வகித்தது கிடையாது. ஐசன் அந்தத் தலைமுறைப் பழக்கத்தைஅவ்வளவு சுலபத்தில் மாற்றிவிடமாட்டார் என்றே நம்பப்படுகிறது.

இவைதான் மேலைநாட்டிலே சமீபத்தில் வெடிக்க இருக்கும் அ. குண்டுகள். வெகு விரைவில் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் நடக்க இருக்கும் பொதுத் தேர்தல்தான் நல்லதோர் முடிவை அறிவிக்க வேண்டும்.



தொழிற் கட்சியா, கன்சர்வேட்டிவா?

ரிபப்ளிகன் கட்சியா? டெமாக்கிராட்டிக் கட்சியா?

—இவைதான் அவ்விரு நாட்டு மக்கள் முன்னே நின்று கொண்டிருக்கும் கேள்விகள். அந்த அ.(ரசியல்) குண்டுகளைப் பொறுத்துத்தான் உலக சமாதானமும் ஒழுங்கும் பெற அமைய வேண்டும்! ★

---

# கும்பமேளா கொலுவில்

'விண்ணகத்து அம்புலியை பிடித்துத்தா — ஆர்ப்பரிக்கும் அலைகடலை அடக்கிக் காட்டு' —என்று கேட்கும் 'சிறுபிள்ளைப் பண்பு' கொண்டதுதானய்யா தி.மு. கழகம். வடநாடு தென்னாடு என்ற பிரிவினைப் பெருங்கடலில் குதித்துவிட்ட அதற்கு, ஐந்தாண்டுத் திட்டம் வேறு ஒரு மரக்கலமாகக் கிடைத்துவிட்டது' — என்ற ஏளனச் சொற்றொடர்களை வீசி, தி. மு. கழகத்தின் இலட்சியங்களை வெறும் 'அர்த்தமற்ற'தாக ஆக்க முயலும் குறுமதியாளர்களை, சென்ற வாரம் நடைபெற்ற டில்லி பாராளுமன்ற நிகழ்ச்சியின் ஒரு பகுதியை சற்று கவனிக்க அழைக்கிறோம்.

தெக்கணத்தின் இரத்தத்தை உறிஞ்சி வடநாடு சேர்க்கும் அட்டைதான் ஐந்தாண்டுத் திட்டம்—வடக்கத்திச் சீமான்களை வர்த்தகக் கோமான்களாக்க நாடாளும் நாயகர்கள் செய்து வரும் முயற்சியே அது—என்ற உண்மை பளிச்சிடும் கண்டனக் குரல்கள், கும்பமேளா கொலு மண்டபத்தில் 'கணீர், கணீர்' என்று ஒலித்தன.

''சென்னை, மைசூர், திரு-கொச்சி, ஆந்திரா, ஐதராபாத் ஆகிய தெற்கத்தி மாகாணங்களுக்கு ஐந்தாண்டுத் திட்டத்தினபடி குறித்த தொகை மிகக் குறைவு; அதிலும் செலவழித்த தொகை மிகமிகக் குறைவு''—

பேசியிருப்பது டாக்டர் கிருஷ்ணசாமியோ அல்லது திருக்குறள் முனுசாமியோ அல்ல. அன்றொருநாள், வடக்கத்தி இந்திப் பெண்ணை சுவீகாரம் ஏற்கத் துடித்து, 'வருக வருக!' என்று வரிந்து கட்டி வரவேற்றாரே அவினாசிலிங்கனார்-ஓமந்தூரார் காலத்து சென்னையின் கல்வி அமைச்சர்—அவர் தான் பேசியிருக்கிறார் அப்படி! மறைத்து வைத்த இதயக் குமுறல் திரை கிழித்து வெளி வந்திருக்கிறது!

வேலையில்லாத் திண்டாட்டத்தின் வெறியாட்டம்-தொழில் வளர்ச்சி, பொருளாதார நிலை வளர்ச்சி இவைகளில் மந்தநிலை-இப்படி வேதனையின் விளைநிலமாய் தென் புலம் காட்சி தருகிறது. இது நாடுணர்ந்த உண்மை. இந்த உண்மை நிலை புரிந்திருந்தும்—'ஏக இந்தியா' என்ற ஜால வார்த்தை பேசி நம்மை சேர்த்தணைக்கும் டில்லி மூலவர்களின் பிடிப்பு உண்மையிலேயே பாசப் பிணைப்பாக இருந்தால், அவர்கள் வகுக்கும் திட்டங்களில் தென்னகம் தனிப்பட்ட முறையில் கவனிக்கப்பட வேண்டும்; அதன் வளர்ச்சிக்கு தேவைக்கு அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். செய்தார்களா? இல்லவே இல்லை! ஆனால், அவர்களின் ஐந்தாண்டுத் திட்டம் எதைக் காட்டுகிறது? ஒதுக்கிய தொகையோ மிகக் குறைவு—அதிலும் செலவுசெய்த தொகை மிகமிகக் குறைவு—சொல்லுகிறார் அவினாசிலிங்கம். அதைத்தான் நாமும் கேட்கிறோம், 'நசுங்கிட நாம்-நாடாள அவர்களா?' என்று!

''ஆந்திர மாநிலத்திடம் மத்திய அரசாங்கம் மாற்றாந்தாய் மனப்போக்குடன் நடந்து கொள்கிறது. அம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு இந்திய அரசாங்கம் எப்போதும் உதவிகரமாக இருக்கவேயில்லை''—

இப்படி மற்றுமொரு குரல் எழும்பிற்று. குரலுக்குரியார் தி. மு. க. உறுப்பினரோ-ஆதரவு பெற்றுச் சென்றவரோ அல்ல. ஆந்திரத்தைச் சேர்ந்த பிரசாதராவ் என்ற உறுப்பினர் ஐந்தாண்டு திட்டத்தின் ஓரவஞ்சனைப் போக்கை இப்படி பகிரங்கப் படுத்துகிறார். 'திராவிடத் தாயின் கர்ப்பத்தில் கிடக்கும் கனிச்செல்வத்தினால் எமக்கில்லையா வாழ்வு? வறுமைதான் எமது வாழ்வுச் சாசனமா?' என கேட்டிருக்கிறது அவரது குரல்!

மற்றும் மைசூரைச் சேர்ந்த குருபாதசாமி என்பவர், 'தென்னாட்டைப் பொறுத்தவரை ஐந்தாண்டுத் திட்டத்தினால், வேலையில்லாத் திண்டாட்டம், குறைவான வேலை வசதிகள், சிறு தொழில் சீரழிவு, மக்களின் குறைந்த வாங்கும் சக்தி—இவைதான் பலன்கள்' என்று இடித்துரைத்திருக்கிறார்.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

பிள்ளைகள் பகுதி :

# பிறைவானம்

ஆசிரியர்

# மணிக்கூண்டு

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

அண்ணா எங்கள் அப்பா ரொம்பவும மோசம். வேலைக்காரனோடு பேசினால் கோபிக்கிறார்; வேலைக்காரன் மகனோடு விளையாடினால் திட்டுகிறார்; அது ஏன?—என்று அபபாவின்மேல் குற்றப் பத்திரிகை அனுப்பியிருக்கிறான் ஒரு திருச்சி தம்பி.

விடை கிடைக்காதது அல்ல தம்பியின் வினா. அதற்குப் பதிலாக ஒரு கதை சொல்லுகிறேன்.

★

அதோ பாருங்கள், அந்தப் பணக்காரத் தெருவின் கோடியிலே ஒரு பெரிய பங்களா; அதனுள் ஒரு ஆறு வயது பாப்பா! பங்களாவுக்கு எதிரே கம்பீரமாக எழுந்து நிற்கிறது ஒரு மணிக்கூண்டு; அதன் கீழே ஒரு சிறுவன்; ஒற்றைக்காலை இழந்த நொண்டிச் சிறுவன்! அந்தப் பிச்சைக்காரச் சிறுவனுக்கும், சீமான் வீட்டுப் பாப்பாவுக்கும் என்ன சம்மந்தம்? நினைத்துக்கூட பார்க்க முடியாது. ஆனால், அவர்களுக்கிடையே பிரிக்கமுடியாத உறவு; மிகமிக நெருங்கிய தொடர்பு! அது ஏன்? எப்படி ஏற்பட்டது?

மேதைகள் எல்லாம் ஆராய்ச்சியில் இறங்குகிறார்கள் அல்லவா, அதற்கு முன்பு 'ஏன்? எப்படி?' என்ற கேள்விகளைத் தாங்களாகவே கேட்டுக்கொள்ளுகிறார்கள். முடிவில் அந்த கேள்விகளுக்கு விடை கிடைக்கிறது. அவைதான் மிகப் பெரிய உண்மைகளாகின்றன; கண்டுபிடிப்புகளாகின்றன. அதைப்போலவே மேலே கண்ட கேள்விகளுக்கும் பதில் தேடுவோம்; விடை கிடைக்கும்; அந்த விடை பெரிய உண்மையையும் சொல்லும். அதுதான் அன்பு!

டாண்......டாண்......

அந்த மணிக்கூண்டின் கடிகாரம் ஆறுமுறை அடித்து ஓய்ந்தது. பொழுது விடிந்தது. பணக்காரவீட்டில் அம்மா எழுந்தார்; அப்பா எழுந்தார்; ஆனால், அவர்களுக்கெல்லாம் முன்னதாகவே எழுந்துவிட்டாள் அவர்களது செல்வ மகள் ராணி! ஆனால், வீட்டில் காணேம். தேடினார்கள். தற்செயலாக ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார் அப்பா. மணிக்கூண்டு கண்ணில் தென்பட்டது. அதன் அடியில் நொண்டிச்சிறுவன். அவனுக்குப்பக்கத்திலே, இரண்டு கால்களையும் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் ராணி.

திடீரென்று "ராணி" என்ற குரல்கேட்டது. திடுக்கிட்டாள்; நிமிர்ந்து பார்த்தாள். அப்பா கோபத்துடன் நின்றுகொண்டிருந்தார். "பொழுது விடிவதற்குள் என்ன இங்கே வேலை?" என்று உறுமினார்.

அப்பா அவளைத் தூக்கிக்கொண்டார். நொண்டிச் சிறுவனை கோபமாக முறைத்தார். 'டேய்! இவளோடு என்ன பேச்சு? இனிமே இப்படி நடந்தால் உதைதான்" என்று கத்தினார். நடந்தார்.

அப்பாவிற்கு ஏன் கோபம்? ராணி யோசித்தாள். அதற்குள் வீட்டிற்குப் போய்விட்டாள்.

மறுநாளும் இதேதான் நிகழ்ந்தது. மீண்டும் நிகழ்ந்தது; நிகழ்ந்துகொண்டேயிருந்தது. ராணிக்கு பொழுதுபோக்கு நண்பனானான் நொண்டி. அவன் பாடுவான்; பதிலுக்கு பலகாரங்கள் தருவாள் ராணி.

★

ஒருநாள் ராணி அப்பாவிடம் பேசினாள். "ஏம்பா, நம்ப மாட்டுக்கு நாலு கால் இருக்கிறதே..." என்று ஆரம்பித்தாள்.

"ஆமாம்; அதற்கென்னடி கண்ணு இப்போ...?"

"அதில்லேப்பா! அதில் ஒரு காலை நம்ப பாட்டுக்காரச் சிறுவனுக்குக் கொடுத்தால் என்ன? பாவம்பா...அவனால் நடக்கவே முடியலை..."

ஆனால், அப்பாவுக்கோ கோபம் வந்துவிட்டது. "சீ... சீ!...இது என்ன பேச்சு?" என்றார், 'கண்ணு'என்று அழைத்த வாயாலேயே! ராணி பயந்து நடுங்கி அப்பால் நகர்ந்தாள்.

★

அன்று ராணியின் பிறந்த நாள் விழா! பொழுது விடிந்தது முதல் வீட்டில் ஒரே கூட்டம்; கொண்டாட்டம்! ராணியால் வீட்டை விட்டு வெளியே தலைகாட்ட முடியவில்லை. அவளுக்கு எண்ணற்ற பரிசுகள் குவிந்தன. ஆனால் ராணியோ தவியாய் தவித்தாள். அவளது சட்டைப் பையிலே கிடந்த சாக்லெட்டும், ரொட்டியும் வேறு தவித்துக்கொண்டிருந்தன. அவள் நொண்டியைப் பார்த்தாகவேண்டும். ஆனால், வழி ஏது?

நேரம் சென்றது; கூட்டம் கலைந்தது; ஆனால் மற்றொரு தடை. மழை பிடித்துக்கொண்டது. ராணி பொறுத்துப் பார்த்தாள். மழை விட்டபாடில்லை. கடைசியில் கொட்டும் மழையில் வீட்டைவிட்டு வெளியே வந்தாள். மணிக்கூண்டை நோக்கி ஓடினாள். ஆனால்... அங்கே...? வழக்கமாக சிரித்தபடி வரவேற்கும் நொண்டி, சுவர் ஓரத்தில் ஒண்டிக்கொண்டு படுத்திருந்தான். ராணி திடுக்கிட்டாள். "ஏய் நொண்டி... நொண்டி!" என்று கூப்பிட்டாள். அவனைத் தொட்டாள். உடல் 'குப்'பென்று சுட்டது. அவனுக்குக் கடுமையான சுரம்! ஆனாலும் விழித்துக்கொண்டான். தட்டுத் தடுமாறி எழுந்து உட்கார்ந்தான். மழை பெய்துகொண்டேயிருந்தது. ராணி பையிலிருந்து சாக்லெட்டுகளையும், ரொட்டிகளையும் எடுத்தாள். அவனிடம் நீட்டினாள். அவன் ஆசையுடன் வாங்கினான். அவசர அவசரமாக சாப்பிடத்தொடங்கினான். ஆனால்...அதே சமயம் அவன் சற்றும் எதிர்பாராத வண்ணம் 'பூட்ஸ்' கால் ஒன்று அவன் கையை எட்டி உதைத்தது. வாயுக்குள் செல்லவேண்டிய மிட்டாய்கள் ஓடும் மழை நீரில் விழுந்தன; உருண்டோடின. மறுகணம் அவன் முதுகிலும் கன்னத்திலும மறிமாறி 'பளார், பளார்' என்று அறைகள் விழுந்தன.

ராணி "அப்பா" என்று அலறினாள். சிறுவன் 'கோ'வென்று அழுதான். ஆனால் அந்த 'விருந்தை'த்தந்த அப்பா, ராணியைத் தூக்கிக்கொண்டார். வீட்டிற்கு ஓடினார். மழை அதிகரித்தது. 'சோ'வென்று ஊற்றியது.

இரவு மழை இன்னும் வலுத்தது. பயங்கரமான இடிகள்; கண்ணைப்பறிக்கும் மின்னல்கள்—இவற்றுடன் ஊரையே கிடுகிடுக்க வைத்தது மழை! சடார் சடாரென்று' முறிந்து விழுந்தன சாலை மரங்கள்!

★

இத்தனை பயங்கரங்களும் அடங்கின. பொழுதுவிடிந்தது. ராணி விழித்துக்கொண்டாள். வழக்கமாக கேட்கும் மணிக்கூண்டின் சப்தம் ஏனே கேட்கவில்லை. ராணி படுக்கையை விட்டு எழுந்தாள். ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். மறுகணம் எதையோ கண்டு திடுக்கிட்டாள்; வெளியே ஓடினாள்.

சாலையோரத்து பெரிய மரமொன்று மணிக்கூண்டின்மேல் வேரோடு சாய்ந்து கிடந்தது. மணிக்கூண்டின் ஒருபகுதி இடிந்து கிடந்தது. அதில் சிக்கிக் கிடந்தான் நொண்டி!

ராணி அவனிடம் ஓடினாள். "நொண்டி...நொண்டி" என்று அழைத்தாள். பதிலில்லை; அவன வாயைத் திறக்கவேயில்லை. அவன் முகத்தை மெதுவாகத் தொட்டாள். அதே சமயம் அவளைப் பின்னாலிருந்து தூக்கினார் அப்பா!

அப்பா அவனைக் கூர்ந்து கவனித்தார். ஏனே அவர் கண்

தொடர்ச்சி 10-ம் பக்கம்

## சிறிய வயதிலே

### யானையை எதிர்த்த 'பால பயில்வான்!'

கோழிச்சண்டை; ஆட்டுச் சண்டை—இவைகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள்; "ஆகா... ஆகா" என்று கத்தியிருப்பீர்கள்; கைதட்டியிருப்பீர்கள். அனல், யானைச் சண்டை பார்த்திருக்கிறீர்களா? அப்பப்பா! எவ்வளவு பயங்கரமாக யிருக்கும்! மலை போன்ற யானைகள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதென்றால்......?

தலைநகரில் அன்று ஒரு யானைச்சண்டை விழா! ஊரே கூடியிருக்கிறது மைதானத்தில். மன்னர் வந்திருக்கிறார்; மந்திரிகள் பக்கத்திலிருக்கிறார்கள். அரச குமாரர்கள் நால்வர், வரிசையாக தங்கள் குதிரைமீது உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள்! ஆசைதுள்ள, ஆச்சரியம் பொங்க சண்டை பார்க்கிறார்கள் அத்தனைபேரும்!

சண்டை நடந்துகொண்டிருந்தது. ஆனால், திடீரென்று அங்கே ஒரு பயங்கரம் நிகழ்ந்துவிட்டது. வேகமாக சண்டை போட்டுக்கொண்டிருந்த யானை ஒன்றுக்கு 'சடக்'கென்று வெறி பிடித்துவிட்டது. கோபத்துடன் கூட்டத்தைப்பார்த்தது. அரசகுமாரர்கள் இருந்த தனி இடத்தை நோக்கிப் பாய்ந்தது.

அவ்வளவுதான்; ஒரே குழப்பம்; கூச்சல்! மக்கள் கூட்டம்கலைந்தது; ஓடியது! அரசகுமாரர்களில் மூவர் தங்கள் குதிரையைத் தட்டிவிட்டார்கள்; யானையின் பாய்ச்சலிலிருந்து தப்பிவிட்டார்கள். ஆனால் பதினாலே வயது நிரம்பிய கடைசி இளவரசன் மட்டும் இடத்தை விட்டு நகரவில்லை; அதோடு மட்டுமல்ல; பாய்ந்துவந்த யானையை எதிர்க்கவும் தொடங்கினான். யானைக்கும் அவனுக்கும் கடுமையான போர்! அரசகுமாரனின்ஈட்டி யானையின் உடம்பெல்லாம் பாய்ந்தது; இரத்தம் பீறிட்டடித்தது. கடைசியில் யானை சோர்ந்தேவிட்டது. அச்சமயம் பார்த்து யானைப்பாகர்கள் அதைப் பிடித்து விட்டனர்.

அரசர் தன் கடைசி மகனின் வீரத்தைக் கண்டு புகழ்ந்தார். ஊரார் வியந்தனர். அந்த குட்டி மாவீரன் யார் என்பதை அறிய உங்களுக்கும் ஆவலாக இருக்கிறதல்லவா? இதோ, சொல்லி விடுகிறேன். அவன்தான் பிற்காலத்தில் பிரபல முகலாய மன்னராகத் திகழ்ந்த ஔரங்கசீப்.

## பெரிய மனிதர்கள்

## நட்சத்திரம்......

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

நம் இப்போதுதான் ஒன்றுக நடிக்கிறார்கள்) காட்சியின் தன்மையை எடுத்து விளக்கிக் கொண் டிருந்தார். பாஸ்கர் அங்கு வந்து நின்றதை தமயந்தியோ, சேகரோ, டைரக்டரோ, முக்கியமான யாரும் கவனிக்கவில்லை.

தமயந்தியின் மடியில் சேகர் தலை வைத்து படுத்திருந்தான். ஆசையோடு அவளது முகத்தைப் பார்த்தபடி அவனது அழகிய முகத்தை தன்னிரு கைகளிலும் வாரியெடுத்தாள் தமயந்தி.

''அன்பே—என் ஆருயிரே!''

''சுவர்க்கபுரிக்கே தூக்கிச் செல்கிறாய் என் தங்கமே!''

'கட்—கட்'

டைரக்டரின் குறுக்கீடு இது. சேகர் எழுந்து உட்கார்ந்தான்.

'இல்லை சேகர்! நீங்களும், தமயந்தியின் விரல்களை உங்கள் முகத்தோடு அணைத்துக் கொண்டு பேசுங்கள். தமயந்தி, நீங்க உங்க முகத்தை கொஞ்சம் கொஞ்சமாக சேகருக்கு பக்கத்தில் கொண்டு போங்க. இல்லீங்க, அது மாத்திரமல்ல; கண்கள் அப்படியே சொக்கின நிலையில். எங்கே—எஸ், ரெடி.'

சேகர் முன்போல் தமயந்தியின் மடியில் படுத்துக் கொண்டான்.

'ரெடி—ஸ்டார்ட் பிளீஸ்'

காமிரா ஓட ஆரம்பித்தது. 'கிளாப்' கொடுத்துவிட்டு விலகிக் கொள்கிறான் பையன். தமயந்தி சேகரின் முகத்தைக் கையிலெடுத்து, ஆசை வழிய, கண்கள் உணர்ச்சியலைகளை அள்ளிவீச, பேச ஆரம்பித்தாள்;

'அன்பே—என் ஆருயிரே!

கண்டத்தில் ஒரு குழைவு—சேகர் அப்படியே மயங்கி விடுகிறான்.

'சொர்க்க புரிக்கே தூக்கிச் செல்கிறாய் என் தங்கமே!'

நாக்குக் குழறியது.

'எங்கிருக்கிறோம் துரையே!'

எங்கிருந்தோ ஒருஅலறல் கேட்டது—

'நிறுத்து—போதும் ஷூட்டிங்!'

பாஸ்கர் ஆத்திரத்துடன் பாய்ந்து சென்று தமயந்தியைப் பிடித்து இழுத்துவர ஆரம்பித்தான். ஒன்றும் புரியாது எல்லோரும் திகைத்து நின்றார்கள். தமயந்திக்கே தனது நிலையை உணர சிறிது நேரம் பிடித்தது.

'என்னங்க இது?'

'போதும் நீ நடித்தது. வா வீட்டுக்கு'

தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சித்தாள் தமயந்தி. முடியவில்லை; பாஸ்கரின் பிடி அவ்வளவு பலமாக இருந்தது.

என்ன நடக்கிறது என்பதை அப்போதுதான் புரிந்து கொண்ட சேகர், ஓடிவந்து குறுக்கே நின்றான்.

'சேகர்! இது எங்களுடைய குடும்ப விஷயம்—நீ தலையிடாதே'

ஆத்திரத்தின் உச்சத்திலிருந்தது அந்தக் குரல்.

தமயந்தி தனது கைகளை விடுவித்துக் கொண்டாள். ஸ்டுடியோ சிப்பந்திகளின் முன்பு இந்த நாடகம்—அவமானம் அவளை எரித்துக் கொண்டிருந்தது; கூசி நின்றாள்.

'நீங்கள் வீட்டுக்குப் போங்கள்; நான் இதோ வந்து விடுகிறேன்.'

'முடியாது—இப்படியே புறப்படு'

'ஸ்...மெதுவாகப் பேசுங்கள்—வெட்கமாகவிருக்கிறது.'

'வெட்கமா? உனக்கா? எனக்கல்லவா மானம் போகுது'

சம்மட்டியால் தலையில் ஓங்கி அடித்ததுபோல் இருந்தது; பொறுத்துக் கொண்டாள் தமயந்தி.

'தயவு செய்து வீட்டுக்குப் போங்கள். பிறகு பேசிக் கொள்வோம்.'

'இப்ப வருகிறாயா; இல்லையா?'

'இதோ, வேலையை முடித்து விட்டு வந்து விடுகிறேன்.'

'நீ வரவே வேண்டாம்.'

வேகமாக வெளியேறினான் பாஸ்கர். அசைவற்று நின்றாள் தமயந்தி. குமுறி எழும் உணர்ச்சிகளை அடக்க முயற்சித்தாள். ஒரு சிறிது வெற்றியுமடைந்தாள். எதுவுமே நடக்காததுபோல மற்றவர்களை திரும்பிப் பார்த்தாள்.

'வாங்க டைரக்டர் சார்; டேக் எடுத்து விடுவோம்.'

இயந்திரம் போல யாவரும் அவளைப் பின்தொடர்ந்தார்கள். ஆனால் ஒருவருக்கும் வேலையில் மனம் செல்லவில்லை.

'இல்லை தமயந்தி; போதும்; ஷூட்டிங்கை நிறுத்தி விடுவோம். நாளை வைத்துக் கொள்ளலாம்.'

ஷூட்டிங் நின்றுவிட்டது. சிப்பந்திகளின் கிசுமுசுப் பேச்சு தமயந்தியின் உயிரைக் குடித்துக் கொண்டிருந்தது.

அவள் மேக்கப் கலைத்து வெளியே வரும்போது சேகர் அருகில் வந்தான்.

'தமயந்தி! மன்னித்துக் கொள்.'

'நீங்க ஏனுங்க வெட்கப்படுகிறீங்க?'

'இம்மாதிரி ஏதாவது நடந்து விடும் என்று ரொம்ப நாளாக சந்தேகப்பட்டேன், நமக்கெல்லாம் குடும்ப வாழ்க்கை ஒத்துவராதம்மா.'

அவனது குரலிலிருந்த பச்சாதாபம் தமயந்தியை ஏறிட்டுப் பார்க்கச் செய்தது. கண்கள் கலங்கின.

'அவர் அப்படிப்பட்டவர் இல்லீங்க; சரி — வணக்கம்—நான்—வருகிறேன்.'

அதுபற்றி சிந்திக்கவே நடுங்கினாளே அவள், எப்படி நிற்பாள் அங்கு? ஓடினாள்.

ஆனால் அவளுக்கு வீட்டில் கிடைத்த வரவேற்பு, ''ஏன் இங்கே வந்தாய்? போ வெளியே!'' என்ற பாஸ்கரனின் கோபக்குரல் தான்.

சமாதானம் சொன்னாள்; கெஞ்சினாள்.

'போ, போ! அந்த சேகருடனேயே போயிரு!'

'ஐயய்யோ! இது என்னபேச்சு? நான் உங்களுக்கு எந்தவித துரோகமும் நினைக்கவில்லையே!'

'போயும் போயும் விபசாரியை வீட்டுக்குள் வைத்துக் கொண்டேனே, என்னைச் சொல்ல வேணும். இன்றோடு நமது உறவு முடிந்துவிட்டது!'

பாஸ்கரனை இழந்து விடுவதா? சப்தமிட்டு கதறினாள் தமயந்தி; 'வேணடாம்—வேண்டாம்! இன்றோடு இந்த சினிமாவையே விட்டு விடுகிறேன்!'

'இனியும் உன்னோடு வாழ்வேன் என்று நம்புகிறாயா? நமது 'விவாஹ ரத்து'ச் செய்தியை பத்திரிகைகளுக்குக்கூட அனுப்பிவிட்டேன்'

'விவாஹ ரத்தா?'

இதை அவள் எதிர்பார்க்கவில்லை. நாளைப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் இந்தச் செய்தி—பிறகு தலைகாட்ட முடியுமா வெளியே?

'ஐயோ! வேண்டாங்க. ஊரெல்லாம் சிரிக்கும்; மானம் போய் விடும்.'

'உனக்கு அது வேறு இருக்கிறதா?'

என்னவோ அந்த முட்டாள் அந்த நேரத்தில் எதெல்லாமோ உளறிக் கொட்டினான். தமயந்தியும் உணர்ந்து கொண்டாள் பாஸ்கரன் தனது முடிவை மாற்றிக் கொள்ளமாட்டான் என்பதை.

அப்படியானால், நடிகை மனைவியாகயிருப்பது குற்றமா? காதல் செய்வது தவறா? இல்லை கலையுலகப் பெண்கள் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடவே கூடாதா? ஐயோ, பாவம்! அவளுக்கு அழுகைதான் பொங்கி வந்தது. அவனெதிரே அழுவதற்குகூட ஏனோ அவளுக்கு வெட்கமாயிருந்தது அப்போது. முகத்தை மறைத்தவாறு அறைக்குள் ஓடிச்சென்று கதவை மூடிக் கொண்டாள்.

துப்பாக்கிக் குண்டு பட்டு சாய்ந்துவிழும் பறவையைப் பார்த்து நிற்பானே வேட்டைக்காரன், அப்படி நின்று கொண்டிருந்தான் பாஸ்கர்.

* * *

காலைப் பத்திரிகையில் 'பிரபல நடிகை விவாஹரத்து செய்து கொள்ளப் போகிறாள்' என்ற செய்தியைப் பார்த்து முதலில் திடுக்கிட்டவன் சேகர்தான்.

டைரக்டரையும் அழைத்துக் கொண்டு தமயந்தியின் வீட்டுக்கே வந்து விட்டான். பாஸ்கர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தவாறு தூங்கிக் கொண்டிருந்தான்.

எழுப்பினார்கள். அவர்களைப் பார்த்து வெறுப்புடன் எழுந்து நின்றான். பத்திரிகையை அவன் முன்னால் நீட்டி, 'பாஸ்கர், இது உண்மையா?' என்று கேட்டான் சேகர்.

கேலிச் சிரிப்புதான் அதற்கு பதிலாக வந்தது!

'ஓர் இளம் பெண்ணின் வாழ்வை அநியாயமாக கெடுக்கிறீர்கள் பாஸ்கர். பின்னால் நீங்களேவருந்த வேண்டி வரும்.'

'அதோ நிம்மதியாக பஞ்சனையில் தூங்கிக்கொண்டிருக்கிறாளே' அவளிடம் போய் சொல்லப்பா உனது பிரலாபத்தை!'

இவ்வளவிலும் தூங்கிக் கொண்டிருக்கிறாளா தமயந்தி? நம்ப முடியவில்லை. ஓடிச்சென்று கதவைத் தட்டினான்.

'தமயந்தி! தமயந்தி!!'

பதில் இல்லை.

உள்ளத்தில் சிறிது அரிப்பு; பலமாகத் தட்டினான்.

பிறகும் பதில் இல்லை.

பாஸ்கரன் தன்னையறியாது கதவருகே வந்தான். ஒருகணம் இருவரும் ஒருவரையொருவர் கூர்ந்து கவனித்தனர். மறுகணம் தனது பலமெல்லாம் சேர்த்து கதவின் மேல் போய் மோதினான் சேகர். உள்ளே உள்ள தாழ்ப்பாள் தெறித்து கதவு திறந்தது.

ஓடினான் அறைக்குள். படுக்கையில் தமயந்தியைக் காணோம்.

## கும்பமேளர்......

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

தி. மு. கழகம் எழுப்பியிருக்கும் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன ஓசையைக் கேட்ட பின்பே அவர்கள் இப்படி பேசியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்ல முடியும்—''பகற்கொள்ளைக்கு புறப்பட்டுவிட்ட வடக்கத்திப் பட்டாளமே!உன் முகம் மறைக்கும் முகமூடியாம்—ஐந்தாண்டுத் திட்டத்தின் போக்கு புரிகிறது! விழித்தே இருக்கிறோம்—தென் நிலத்தின் உடமையின்பேரில் கை வைக்காதே! உனக்கில்லை உரிமை!'' என்றுதான் அந்தக் குரல்கள் எச்சரிக்கின்றன; அபாய அறிவிப்பு விடுகின்றன!

சிந்தை நெகிழ்ந்து நாம் சொன்னோம்; சிரித்து மகிழ்ந்தனர். இன்று சீறிவரும் புயற்காற்றோ—குமுறி எழும் எரிமலையோ என திசை எட்டும் எதிர்ப்பு! 'கும்பமேளர்'-அவர் தான் நேரு-பதில் என்ன சொல்லுகிறார்?

''ஏக இந்தியாவை ரட்சிக்க வந்த அப்பனே! அருட் கடாட்சம் அளிக்க வந்த ஐயனே! ஐந்தாண்டுத்திட்டமே! எழுந்தருள்வாய்!' என்று விருதுதூக்கும் விபீஷணர்கள்தான் என்ன சொல்லுகிறார்கள்?

---

## பிறைவானம்...

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

*கள் கலங்கின. ஆனாலும், ராணியுடன் வீட்டிற்குச் சென்றார்.*

*சற்று நேரத்திற்கெல்லாம் அந்த இடத்தில் விழுந்து கிடந்த மரம் அகற்றப்பட்டது. பிச்சைக்காரச் சிறுவனின் அநாதைப் பிணமும் அகற்றப்பட்டது!*

*அவனைக் காணாத ராணி அப்பாவிடம் ஓடினாள். 'ஏம்பா ...எங்கேப்பா நொண்டியைக் காணோம்?...'' என்று தொந்தரவு செய்ய ஆரம்பித்தாள்.*

*அப்பா ஜன்னல் வழியாக மணிக்கூண்டை கவனித்தார். ஒற்றை முள் ஒடிந்து கிடந்த ஓடாத கடிகாரத்தைப் பார்த்தார். ''அவன் தனக்கு ஒரு கால் சம்பாதிக்கப் போயிருக்கான்...வந்துடுவான்...'' என்று சொன்னார். அவர் கண்கள் கலங்கின. அழுதார். அவரது அழுகையின் அர்த்தம் ராணிக்குப புரியவில்லை.அவரது பொய்யை நம்பினாள். பள்ளிக்குப் புறப்பட ஓடினாள்!*

— சொர்ணம்

---

கடிதம் ஒன்று கிடந்தது. கையிலெடுத்தான்.

'தமயந்தி!'—என்ற அலறல் அந்த இடத்தை நடுங்கவைத்தது. ஆம்; அது பாஸ்கரனுடைய குரல் தான்! திரும்பினான்; எதிரே, மின்சார விசிறியின் கீழே கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தாள் தமயந்தி!

அப்படியே உணர்வற்று கீழே வீழ்ந்தான் சேகர்!

★

'நம்நாடு' தனி நிருபர் தரும் தகவல்

# கூண்டோடு காங்கிரசில் சேரவா ? கூட்டணியோடு அதை எதிர்க்கவா?

சென்னை, மார்ச் 24—

திராவிட பார்லிமெண்டரி கட்சியினர், தங்கள் எதிர்காலத் திட்டம் எப்படி இருக்கவேண்டுமென்று தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

சட்ட சபைக்குள் இயங்கி வரும் மேற்படி கட்சியின் உறுப்பினர்கள், பல ஆண்டுகளாகவே நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம், தமிழர் இயக்கம், திராவிட இயக்கம் ஆகியவற்றுடன் குறிப்பிடத்தக்க அளவு தொடர்பு கொண்டவர்கள் என்பதும், கடந்த தேர்தலின்போது திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவைகளின் ஆதரவைப் பெற்றவர்கள் என்பதும் அனைவரும் அறிந்ததே.

சட்ட சபையில், திராவிட பார்லிமெண்டரி கட்சியாக இயங்கும் ஏற்பாட்டுக்கு பெரியாரின் ஆலோசனையும், சம்மதமும், ஆதரவும் பெறப்பட்டதாக, திராவிட பார்லிமெண்டரி கட்சியினர் கூறினர்—கூறியும் வருகின்றனர்.

திராவிட பார்லிமெண்டரி கட்சி, இனி சட்ட சபைக்கு வெளியிலும் பணியாற்றுவது — அடுத்த தேர்தலில் திராவிட பார்லிமெண்டரி கட்சியின் பெயராலே ஈடுபடுவது—என்பது, இப்போது அவர்கள் கொண்டுள்ள எண்ணமாகும்.

"திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் தேர்தலில் ஈடுபடாமலிருப்பதாலேயே, தாங்கள் தனியாக ஒரு கட்சி அமைத்துத் தேர்தலில் ஈடுபடவேண்டிய நிலைமை ஏற்படுகிறது." — என்று கூறுகிறார்கள்.

இந்தக் கருத்துக்கு பெரியாரின் சம்மதமும், ஆதரவும் கிடைக்குமா என்று அறிவதே திராவிட பார்லிமெண்டரி கட்சியின் முதல் நடவடிக்கை ஆகும்.

காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் என்ற முறையிலும், திராவிடரின் நலனுக்கு ஆதரவாளர்கள் என்ற முறையிலும், பெரியாரின் பேராதரவு பெறும் உரிமை தங்களுக்கு முழுக்க முழுக்க இருக்கிறது என்ற நம்பிக்கையுடனேயே திராவிட பார்லிமெண்டரி கட்சி இருக்கிறது.

ஆனால், சின்னாட்களுக்கு முன்பு நடைபெற்ற இடைத் தேர்தல்களில், திராவிடர் கழகம் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரித்ததும், பொதுவாகவே காமராசர் மந்திரி சபைக்கு ஆதரவு அளிப்பதும், திராவிட பார்லிமெண்டரி கட்சியினருக்கு சந்தேகத்தையும், பயத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

எனவே, திராவிட பார்லிமெண்டரி கட்சியினர் இரு கிழமைகளுக்கு முன்பு ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தி, பெரியாரிடம் கலந்து பேசுவது என்று முடிவு செய்தனர்.

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டையும் சமரசப்படுத்துவது என்பதும், திராவிட பார்லிமெண்டரி கட்சியின் திட்டத்தில் ஒரு பகுதியாகும்.

திராவிட பார்லிமெண்டரி கட்சியின் இந்தத் திட்டம் பற்றி, முதலில் திராவிடர் கழகக் கருத்தை அறிந்துகொண்டு, பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திடம் கலந்து பேசலாம் என்று முடிவு செய்தனர்.

இந்தத் திட்டத்தின்படி, 23-3-55 அன்று திராவிட பார்லிமெண்டரி கட்சியைச் சார்ந்த தோழர்கள் வி. வி. இராமசாமி, சுயம்பிரகாசம், ரத்தினசாமி ஆகியோர் பெரியாரைச் சந்தித்துப் பேசினர்.

எதிர்கால அரசியலில் தாங்கள் எப்படி நடந்துகொள்வது? தேர்தலில் காங்கிரசை எதிர்த்து போட்டியிடுவதா? அப்படிச் செய்யும்போது தங்கள் திராவிடகழகத்தின் ஆதரவு கிடைக்குமா? இடைத் தேர்தல்களில் காங்கிரசை ஆதரித்தது போலவே, அடுத்து வருகிற பொதுத் தேர்தலிலும், காங்கிரசை ஆதரிக்கும் போக்கிலே திராவிடர் கழகம் இருந்துவிடுமா? அப்படி நேரிட்டுவிட்டால், காங்கிரஸ் தலைவர்கள் புகுத்த விரும்புகிற ஒரு கட்சி சர்வாதிகாரம்தானே நாட்டிலே நிலவும்? அந்த நிலைமையை பெரியார் விரும்புகிறாரா? திராவிடர்களின் அரசியல் பிரச்சினையை அடியோடுஇழந்துவிட வேண்டியதுதானா-என்பன போன்ற பிரச்சினைகளைப் பற்றி, திராவிட பார்லிமெண்டரி கட்சியினர் பெரியாரிடம்பேசி, அவர் கருத்தை அறிய விரும்பினர்.

பெரியார், தேர்தலின் போது காட்டும் அக்கரையைப் பிறகு விட்டுவிடுகிற போக்கையும், திராவிடர் கழகத்தின் முயற்சிகளுக்கு ஆதரவு காட்டாத தன்மையையும், தேர்தலின்போது காங்கிரசை எதிர்த்து வெற்றிபெற்று, பிறகு, சொந்த இலாபத்துக்காகக் காங்கிரசோடு கலந்துவிடுவதையும் எடுத்துக் காட்டிக் கண்டித்தார்.

திராவிட பார்லிமெண்டரி கட்சியினர், 'அப்படியானால், இப்போதுள்ள நிலைமையில் நாங்களும் கூண்டோடு காங்கிரசில்சேர்ந்து விடலாமா?' என்று கேட்டனர்.

பெரியார் அவர்களின் ஆதரவு தங்களுக்கு எப்படியும் தரப்பட வேண்டும் என்பதையும், காங்கிரசை—ஒரு கட்சி சர்வாதிகாரம் நடத்தவிடக்கூடாது என்பதையும் மீண்டும் வலியுறுத்திக் கூறினர்.

பெரியார், யோசித்துத் தமது கருத்தை அளிப்பதாகக் கூறி, '26-ந்தேதிக்குமேல் மீண்டும் சந்திக்கலாம்,' என்றுகூறி அனுப்பிவிட்டார்.

மீண்டும் பெரியாரைச் சந்தித்து, இந்த பிரச்சினைக்கு ஒரு மகிழ்ச்சிகரமான முடிவுகாணப்போவதாக நமது நிருபரிடம், பெரியாரிடம் தூது சென்றவர்களில் ஒருவர், நம்பிக்கையுடன் தெரிவித்திருக்கிறார்.

"பெரியாரை விட்டால் எங்களுக்கு யார் துணை—எங்களை ஆதரிக்காமல் பெரியாருக்கு வேறு யாரை ஆதரிக்க மனம் வரும்?" என்று பாசத்தோடு அவர் கூறினார்.

"கடைசிவரையில் முயற்சி எடுத்துப் பார்ப்பது; முடியவில்லையானால், காங்கிரசிலேயேசேர்ந்து விடுவது; அப்போது, பெரியாருடைய ஆதரவும், காமராசர் ஆதரவும், சேர்ந்து கிடைக்கும்."— என்று, திராவிட பார்லிமெண்டரி கட்சியினரில் சிலர் கருதுகிறார்கள்.

திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டையும் 'ஒன்றுபடுத்துவது' என்பது பற்றி, திராவிட பார்லிமெண்டரி கட்சியினர் செய்யும் முயற்சிபற்றி தி. மு. க. பொதுச்செயலாளர் கேட்கப்பட்டபோது "பத்திரிகையில் செய்தி பார்த்தேன்; வேறேதும் அறியேன்," என்று கூறிவிட்டு, "திராவிட பார்லிமெண்டரி கட்சியினர், இந்த 'ஒன்றுபடுத்தும்' வேலையைக் கவனிப்பதைக் காட்டிலும், எதிர்கால அரசியல் நிலைமை குறித்து பெரியாருடன் 'ஒருமித்த' கருத்துக்கு வர இயலுகிறதா என்பது பற்றிக் கவனிப்பது நல்லது." என்று கூறினார்.

எந்தக் காரணம்கொண்டோ, பெரியாருக்கும்—திராவிட பார்லிமெண்டரி கட்சியினருக்கும் 'குடும்பப் பாசம்' ஏற்பட முடியாமல் போய்விட்டால், எதற்கனவே 'பாக்கியவான்' ஆக விளங்கும் காமராசருக்கு மேலும் 'யோகம்' அடிக்கும் என்றுதான் தெரிகிறது; பெரியாரும் எங்களைக் கைவிட்டுவிட்டால்—காங்கிரசை அவர் ஆதரிப்பது என்பது நீண்டகாலத் திட்டமாகிவிட்டால், நாங்கள், காங்கிரசிலே சேர்ந்து காமராசரின் அன்பையும், பெரியாரின் ஆதரவையும் பெற்றுக்கொள்ளும் வழியைப் பார்க்கவேண்டியதுதான்"

என்று கருதுபவர்கள் திராவிட பார்லிமெண்டரி கட்சியில் இருக்கிறார்கள்.

★

## பாபுராவின் பதில்!

(?) பம்பாயில் சமீபத்திய செய்தி என்ன ?

*குடியரசு தின விழாவன்று ஆட்சியாளர்களின் மாளிகைகளிலெல்லாம் விளக்கேற்றி வைக்கப்பட்டிருந்தன. ஆனால் குடிகளோ வீட்டிலுள்ள விளக்குகளை அணைத்துவிட்டார்கள்!*

(?) தீண்டாமை என்றால் என்ன ? தீண்டத் தகாதவர்கள் யார் ?

*ஆதிக்கம் என்னும் கொதிக்கும் பாத்திரத்தின் மேல்தளத்தில் வந்து படியும் தூசிதான் தீண்டாமை. அந்த ஆதிக்கம் எங்கு இருக்கிறது என்று தெரிந்துகொள்; பின்னர் தீண்டத்தகாதவர்களையும் நீ சுலபத்தில் தெரிந்துகொள்ளலாம். தென்னாட்டிலே பார்ப்பனர்கள்தான் இப்போது தீண்டத் தகாதவர்களாகிவிட்டார்கள்.*

(?) இப்போது புளித்துப் போன செய்தி என்ன?

*நேரு ஒரு சோஷலிஸ்ட் என்பதுதான். இந்தச் செய்தியிலே இருபது வருஷத்து புளிப்பு இருக்கிறது.*

(?) தேவதாசி முறை இன்னும் இருக்கிறதா ?

*தென்னாட்டுக் கோவில்களிலே உள்ள 'தேவா'க்களெல்லாம் இப்போது கோவில்களிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்; 'தாசி'களெல்லாம் வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள்!*

(?) கிருஷ்ணமேனனுடைய வருங்காலத்தை உம்மால் சொல்லமுடியுமா ?

*நேருவுக்குப் பிறகு அவரும் ஒரு சாதாரண மலையாளியாகிவிடுவார். உருவம் மறைந்துவிட்டால் நிழலுக்கு என்ன பெருமை ?*

(?) நீர் இதுவரை கேட்ட 'தமாஷ்'களிலே சிறந்தது எது?

*இந்திய பனியாக்களுக்குச் சொந்தமான காங்கிரசின் 'புதிய சோஷலிசம்' தான்!*

(?) நீர் ஏன் கதர்க் குல்லாய் அணிந்துகொள்வதில்லை ?

*என்னிடம் வழுக்கைத் தலையும் கிடையாது; முட்டாள்தனமும் இல்லை—மூடி மறைத்துக்கொள்வதற்கு!*

— 'பிளிட்ஸ் இண்டியா'—மார்ச்-1955

# கடைசிப்பக்கம்

ஏழுமலை; ஆற்காடு.

(?) பேரூரில் நடைபெற்ற தி. மு. க. வின் பொதுக்குழுவை, 'நிதி திரட்டும் குழு'—என்று குத்தூசியார் வர்ணித்திருக்கிறாரே—இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

ஐயோ, பாவம்! விரைவிலே தானும் பெரியாருக்காக 'கார்நிதி' யொன்றை திரட்டவேண்டி யிருக்கும்—என்பது தெரியாமல் உளறி விட்டார். அவர்! 'அவசரசாமி' யல்லவா? எப்படி அவரால் பிறவிக் குணத்தை மாற்றிக் கொள்ள முடியும்?

சாமிநாதன்; தூத்துக்குடி.

(?) திராவிடநாடு பிரிந்தால், அப்போது முதன் முதலாக நிறைவேற்றப்படும் சட்டம் எதுவாக இருக்கும்?

ஜாதி ஒழிப்புச் சட்டம்தான் என்று அறிஞர் அண்ணா அவர்கள் முன்பு ஒரு கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறார்!

சண்முகம்; பன்றிமலை.

(?) உலகத்திலேயே சிறந்த பேச்சாளர் யார்?

ஐரோப்பாவின் தலைசிறந்த ஆங்கிலப் பேச்சாளர் 'வின்ஸ்டன் சர்ச்சில்! ஆசியாவின் பெருமைக்குரிய பேச்சாளி பெரியார் ராமசாமி என்று சின்னுட்களுக்கு முன்பு 'கேரவான்' ஆங்கில இதழ் எழுதியிருந்தது.

• இளமதி; கீழக்கரை.

(?) மதுரை தி. மு. க. வானத்திலிருந்த சில நட்சத்திரங்கள் விழுந்துவிட்டனவாமே!

மதுரையில் விழுந்தது நட்சத்திரங்களல்ல; போலித் தோற்றம் காட்டுவதில் பெயர் பெற்ற எரிகற்கள்! ஒவ்வொரு கட்சியிலும் தோன்றி மறைவதுதான் அவைகளின் பிறவிக்குணம்!

கலைச்செல்வி; மாயூரம்

(?) பிறவிக் குருடு—செவிடான ஹெலன் கெல்லர் எப்படி ஸ்பரிசத்தாலேயே உருவத்தையும்—அவர்கள் உள்ளத்தையும் கண்டுபிடிக்கிறர்?

ஹெலன் கெல்லர் போன்ற அங்கஹீனர்களுக்கு, மற்றவர்களுக்கு இருக்கும் பஞ்சேந்திரியங்களைப்போல் அல்லாமல், ஆருவது உணர்ச்சி ஒன்றும் உருவாகிறது. ஹெலன் கெல்லர் அந்த 'ஆருவது உணர்ச்சி'யை வளர்த்துக் கொண்டிருக்கிறார். ஆனல் தெளிவற்ற அரசியல் குருடுகளும் செவிடுகளுமோ, அந்த 'உணர்ச்சி' யை வளர்க்காமலேயே அழித்துக் கொள்கின்றன.

இராம. நடராசன்; முகந்தனூர்

(?) மதத்தைப் பற்றி உங்கள் முடிவான கருத்தென்ன? குழப்பாமல் பதில் சொல்லுங்கள்.

மதத்தை அபின் என்கிறர் மார்க்ஸ். கம்யூனிஸ்ட்டுகள் ஆமோதிக்காவிட்டாலும் நாங்கள் இதை ஒப்புகிறோம். இன்னும் தெளிவான பதில் வேண்டுமா? இதோ நெப்போலியனைப் பேசவிடுகிறேன்: "மதம் சொர்க்கத்தைப் பற்றிப் பேசுகிறது; சொர்க்கத்தோடு சமத்துவ பாவத்தையும் சேர்த்துப் பேசுகிறது. அதனுல்தான் ஏழை மக்கள் பணக்காரக் கும்பலை கண்டதுண்டமாக வெட்டிப் போடாமல் இருக்கிறார்கள்...ஒருவன் பட்டினியால் வாடி மடிகிறான். பக்கத்தில் ஒருவன் அறுசுவையோடு கூடிய விருந்தை விலாப்புடைக்க அருந்திக்கொண்டிருக்கிறன். முற்கூறிய பசியேப் பக்காரன் பிற்கூறிய புளியேப்பக்காரனைச் சகித்துக்கொண்டு வாழ்க்கை நடத்துவதெப்படி? மனித சக்திக்கு மீறிய ஒரு சக்தி உண்டென்றும், இவ்வுலகத் திருப்பத்திற்கு மாருக அடுத்த உலக இன்ப துன்பங்கள் இருக்குமென்றும் அவன் நம்பவேண்டும். அந்த நம்பிக்கையைத்தான் மதம் விரியோகித்து வருகிறது" பிற்போக்குக் கூட்டத்தாரின் கேடயம்தான் மதம் என்பதற்குஇதைவிட என்ன ஆதாரம் வேண்டும்?

ராகவன் கரூர்;

(?) இந்தியாவின் கூறை எது; காஷ்மீரா ?

அல்ல: அல்ல-கதர்க் குல்லாய்!

அங்கு; சென்னிமலை

(?) உமக்குப் பிடித்தமான நடிகர் யார் ?

நேருதான்! அவருடைய ஒவ்வொரு புகைப்படமும், அதிலே காணப்படும் தோற்றங்களும் அவரை ஒரு பெரிய நடிகனுகத்தான் பிரகடனப்படுத்துகின்றன !

## காஞ்சி கலை விழா

(ஏழை மாணவர் உதவி நிதிக்கு)

காஞ்சி கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில்

—: நாடக நிகழ்ச்சிகள் :—

**30-3-55**

திரு. லோபோ பிரபு அவர்கள் தலைமையில்
எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி குழுவினரின்

**மகாராணி**

**31-3-55**

திரு. எஸ். சுயம்பிரகாசம் எம். எல். ஏ. அவர்கள் தலைமையில்
மனேகர், வித்தியாவதி குழுவினரின்

**இன்பநாள்**

**1-4-55**

திரு. டி. சண்முகம் எம். எல். ஏ. அவர்கள் தலைமையில்
எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினரின்

**ஆசை நினைவு**

**2-4-55**

திரு. தெய்வசிகாமணி எம். எல். ஏ. அவர்கள் தலைமையில்
எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினரின்

**பகைவனின் காதலி**

**3-4-55**

திரு. ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் தலைமையில்
தியாகராய கல்லூரி கலைக்குழுவினரின்

**மணிநாட்டுக் கூனன்**

**4-4-55**

திரு. ஈ. வி. கே. சம்பத் அவர்கள் தலைமையில்
தியாகராய கல்லூரி கலைக்குழுவினரின்

**எதிர்பார்த்தது**

**5-4-55**

அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் குழுவினரின்

**தளபதி**

## கொள்கை வளருது கோபுரம் போலே!

### தி. மு. க. கிளைக் கழக தேர்தல் முடிவுகள்.

**மதுரை**

செயலாளர் : பி. கே. சேதுராமன்
துணை. செயலாளர் : என். எஸ். ராசா
பொருளாளர் : எஸ். முனியப்பன்
மாவட்ட உறுப்பினர் : எஸ். முத்து உள்ளிட்ட இருபது பேர்.

**திருச்சி**

செயலாளர் : எம். எஸ். மணி
து. செயலாளர் : சு. அருணகிரி
பொருளாளர் : ஏ. நடராசன்
மா-உறுப்பினர் : எம். எஸ். மணி உள்ளிட்ட பதினேழு பேர்.

**ஆர்க்காடு**

செயலாளர் ; பொன்னம்பலம்
து-செயலாளர் : ஜெ. சபாபதி
பொருளாளர் : ஏ. டி. வேணுகோபாலன்
மா-உறுப்பினர் - ஏ. கே. வில்வம், பெ. த. ஈஸ்வரன்

**கொடுவாய்**

செயலாளர் : கே. பி. இராமசாமி
து-செயலாளர் : பி. சுவாமிநாதன்
பொருளாளர் : ஏ. பழனிசாமி
மா-உறுப்பினர் : எஸ். நமசிவாயம், ஏ. செல்வராசன்

**கீரப்பாளையம்**

செயலாளர் ; மா. கண்ணையன்
து-செயலாளர் : கே. பி. சுப்பிரமணியம்
பொருளாளர் : மா. பழனிவேல்
மா-உறுப்பினர் ; மா. இராமையன்

## பிறப்பு

முல்லை கொம்மை திரு. வடிவேலு அவர்களின் துணைவியார் திருமதி மரகதவல்லி அம்மையார் சென்ற 29-3-55 அன்று ஒரு பெண் மகவுக்குத் தாயானுர்கள். தாயும் சேயும் நலம்.

★

மாயவரம் தோழர் காந்தி அவர்களின் துணைவியார் சந்திரோதயத்திற்கு 2-3-55 ஞாயிறுகாலை 7-மணிக்கு ஆண்மகவு பிறந்து, தாயும் சேயும் நலம்.

★

இலையமுது கூடம் தி. மு. க. பொருளாளர் திரு இரா. அகோரம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி தங்கப்பாப்பு அம்மையார் சென்ற 14-2-55 அன்று ஒரு பெண் மகவுக்குத் தாயானர்.

★

நமச ஆழ்வார்திருநகரி விற்பனையாளர் திரவியம் அவர்களின் துணைவியார் திருமதி இரஞ்சிதமணி அம்மையார், ஒரு பெண் மகவுக்குத் தாயானர்.